

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)



வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000
$20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@axelinsurance.com
www.axelinsurance.com
AXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 06 November 2026 இதழ்:- 33

ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

ஞானசார தேரர் விடுவிக்கப்படுவார்!



ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய அரசியல் பிரமுகர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கடந்த வாரத்தில் சந்தித்த போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் உள்வீட்டு தகவல் களை பகிர்ந்துக்கொண்டார். ஞானசார தேரரின் கைது குறித்து அவர் குறிப்பிடுகையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனக்குத்தானே தேடிக் கொண்ட ஒரு தேவையற்ற நெருக்கடி தான் ஞானசார தேரரின் கைது மற்றும் காவி ஆடை விவகாரம். நல்லாட்சி அரசாங்கத்தின் போதும் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அன்று அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அவரது காவி உடையில் கை வைக்க வில்லை.

ஏனெனில், அத்தகைய ஒரு நடவடிக்கை பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பாரிய கொந்தளிப்பையும் எதிர்வினையையும் ஏற்படுத்தும் என்பதை அரசியல் அனுபவம் மிக்க ரணில் நன்கு அறிந்திருந்தார். இதனால் அன்று அந்த விவகாரம் ஒரு பெரிய அரசியல் பேசுபொருளாக (12ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க இடைத்தேர்தல் முடிவுகளால் பெரு மகிழ்ச்சி அடையும் ஒன்ராறியோ - அல்பெரட்டர் முதல்வர்கள் மகிழ்ச்சி!

அமெரிக்க இடைத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, கனடாவின் ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி யுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வரி விதிப்புக் கொள்கைகளால் ஒன்டாரியோவின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தேர்தல் முடிவுகள் அவருக்கு விடுக்கப்பட்ட ஒரு வலுவான எச்சரிக்கையாக அமைந்திருப்பதாக ஃபோர்ட் குறிப் பிட்டுள்ளார்.

முடிவுகள் வெளிவந்தபோது நான் மகிழ்ச்சியில் குதித்துக் கொண் டிருந்தேன். அமெரிக்க மக்கள் சரியான பதிலை வழங்கியுள்ளனர் என ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைக் செலவினங்கள், எரிபொருள் விலை, ஈரான் போர் மற் றும் எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கைக் செலவை அதிகரிக்கும் இறக்குமதி வரிகள் ஆகியவற்றை(8ம் பக்கம் பார்க்க)



இந்திய - சீனா உறவுகளுடான பெலவத்தையின் அரசியல் நகர்வு எத்தனை வருட ஆயுளுக்கானது!

அமெரிக்க இடைத் தேர்தலில் 3 இந்திய வம்சாவழியினர் வெற்றி! சுஹாஸ் சுப்ரமணியம் அமோக வெற்றி!

அமெரிக்காவில் தற்போது நடைபெற்ற வரும் இடைத்தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மூவர் வெற்றி பெற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் தற்போது நடை பெற்ற வரும் இடைத்தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ள இந்திய வம்சாவளியான சுஹாஸ் சுப்ரமணியம், அமெரிக்காவில் வெறுப்பு மிகுந்த செயற்பாடுகளும் பாகுபாடுகளும் அதிக ரித்து வருவதை சுட்டிக்காட்டி, இந்திய அமெரிக்கர்களும் இடைக்கால தேர்தல்களில் பங்குபற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்த இடைக்காலத் தேர்தலில் 63.16 சதவீதத்துடன் 1,73,106 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய சுப்ரமணியம், விர்ஜீனியா மாகாணத்தின் 10வது நாடாளுமன்றத் தொகுதியை (செனட்) பிரதிநிதித்துவப்படுத்தும் முதல் இந்திய அமெரிக்கர் என்கிற தகுதி யைப் பெறுகிறார்.

சுப்ரமணியத்தின் தந்தை இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள சென்னையைச் சேர்ந்தவர். அவரது தாய் பெங்களூருவைச் சேர்ந்தவர் ஆவார். இவர் டுலேன் பல்கலைக் கழகம், நோர்த்வெஸ்டர்ன் பல்கலைக் கழகத்தின் பிரிட்ஸ்கர் சட்டக் கல்லூரி யில் பட்டப்படிப்பை நிறைவு செய்து, சட்டத்தரணியாக சேவையாற்றி வரு கிறார்.

இவர் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னர் முன்னாள் அமெரிக்க ஜனாதி பதி பராக் ஒபாமாவின் ஆட்சியின் கீழ் வெள்ளை மாளிகையில் தொழில்





நுட்பக் கொள்கை ஆலோசகராக பணியாற்றினார். 2023இல் இவர் வர்ஜீ னியா பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெ டுக்கப்பட்டார். 2023 - 2024 காலப் பகுதியில் மாநில செனட்டில் பணி யாற்றினார்.

இதற்கு முன்னர் தேர்தல் பிரச்சாரத்தின் போது, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகள், சுகாதாரப் பாதுகாப்பு, மத்திய அரசு ஊழியர்களை நடத்தும் விதம், க்ரீன் கார்ட் நிலுவைப் பிரச்சினைகள், எச்-1பி விசா திட்டம் என்பவற்றை சுட்டிக்காட்டி, ட்ரம்ப் ஆட்சியை கடுமையாக விமர்சித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஜனநாயகக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்ட பியா தாண்டியா, அருணா மில்லர் ஆகிய மேலும் இரு இந்திய வம்சாவளிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

பியா தாண்டியா என்பவர் புளோரிடா வின் 22வது நாடாளுமன்றத் தொகுதி யில் போட்டியிட்டு, குடியரசுக் கட்சி வேட்பாளரான கேசி அஸ்கரை தோற் கடித்து, 51.9 சதவீத வாக்குகளைப் பெற்று வென்றுள்ளார். அந்த வகையில் இவர் புளோரிடாவிலிருந்து அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் இந்திய - அமெரிக்கர் ஆவார். மேரிலாந்து துணை ஆளுந ரான அருணா மில்லரும் இத்தேர்தலில் வெற்றி பெற்று தனது துணை ஆளுநர் பதவியை தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்க இடைத்தேர் தல் வரலாற்றில் முதல் முறையாக கறுப்பினப் பெண்ணொருவர்



ஆளுநராக தகுதி பெற்றுள்ளார். அமெ ரிக்க இடைத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட கறுப்பி னப் பெண்ணொருவர் வெற்றி பெற்று ள்ளமை வரலாற்றுப் பதிவாகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான குடியரசுக் கட்சிக்கும் எதிர்க்கட்சியான ஜனநாய கக் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவி வரும் இந்த தேர்த லுக்கான வாக்குப்பதிவு (3) நடை பெற்றதையடுத்து, தற்போது வாக்கு களின் முடிவுகள் வெளியாகி வருகின் றன.

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், குடியரசுக் கட்சியை பின்தள்ளி, ஜனநாயகக் கட்சி முன் நிற்கிறது. இந்த நிலையில் (4ம் பக்கம் பார்க்க)

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

அமெரிக்க இடைத்தேர்தல் முடிவுகளால் பெரு மகிழ்ச்சி அடையும் ஒன்ராறியோ - அல்பெரட்டர் முதல்வர்கள் மகிழ்ச்சி!





அமெரிக்க இடைத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, கனடாவின் ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி யுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வரி விதிப்புக் கொள்கைகளால் ஒன்டாரியோவின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தேர்தல் முடிவுகள் அவருக்கு விடுக்கப்பட்ட ஒரு வலுவான எச்சரி க்கையாக அமைந்திருப்பதாக ஃபோர்ட் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுகள் வெளிவந்தபோது நான் மகிழ்ச்சியில் குதித்துக் கொண்டிருந்தேன். அமெரிக்க மக்கள் சரியான பதிலை வழங்கி யுள்ளனர் என ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைக் செலவினங்கள், எரிபொருள் விலை, ஈரான் போர் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கைக் செலவை அதிகரிக்கும் இறக்குமதி வரிகள் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டே மக்கள் தமது வாக்கைப் பதிவு செய்து ள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். ஜனநாயகக் கட்சியினர் அமெரிக்க செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை இரண்டையும் கைப்பற்றியுள்ளமை குறித்துத் தெரிவிக்கையில், `ட்ரம்ப் மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதை நிறுத்திவ ிட்டு, தேர்தல் முடிவுகளுக்கு அவரே பொறுப்பேற்க வேண்டும்` எனக் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்க இடைத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி அடைந்துள்ள அமோக வெற்றி, எல்லையோர வர்த்தகப் போர் தொடர்பாகத் தான் மேற்கொண்ட அணுகுமுறையின் சரி யானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாக கனடாவின் அல்பெர்ட்டா மாகாண முதலமைச்சர் டேனியல் ஸ்மித் தெரி வித்துள்ளார்.


வரி விதிப்புகளுக்கும் அதனால் இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளிலும் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளுக்கும் தமது அரசாங்கம் எப்போதும் எதிர்ப்பைப் பதிவு செய்து வந்ததாக ஸ்மித் குறிப்பிட்டுள்ளார். செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில், ஜனநாயகக் கட்சியினர் அமெரிக்க காங்கிரஸின் இரு அவைகளையும் கைப்பற்றியுள்ளதுடன், நீண்டகாலமாக குடியரசுக் கட்சியின் வசம் இருந்த செனட் இடங்களையும் மாகாண அளவிலான பதவிகளையும் தமதாக்கிக் கொண்டனர்.

இந்த முடிவுகள், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகளுக்கும், கனடா போன்ற வர்த்தகப் பங்காளிகளை அவர் நடத்திய விதம் குறித்த அணுகுமுறைக்கும் கிடைத்த ஒரு பரவலான கண்டனமாகவே பார்க்கப்படுகின்றன.

இடைத்தேர்தல் முடிவுகள் மூலம் கனடா மற்றும் அமெரிக்கா விற்கு இடையிலான வர்த்தக மற்றும் அரசியல் உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்பு கிடைக்கும் எனத் தான் நம்புவதாக டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க தற்போது அவரது அதிகாரம், செல் வாக்கு என அனைத்தும் காலியாக, நெட்டிசன்கள் சும்மா இருப்பார்களா? மீம்ஸ்களை உருவாக்கி பகிர்ந்து வைரலாக்கி வருகிறார்கள்.விடியோக்களும், புகைப்படங்களும், கேலி சித்திரங்களும் என சமூக வலைத்தளங்களில் முழுக்க ட்ரம்ப் தான் பேசுபொருளாகியிருந்தார்.

தள்ளவண்டியில் சர்பத் தயார் செய்யும் ட்ரம்ப், உணவகத்தில் வேலை செய்வது போன்ற கேலி சித்திரங்கள் அதிகம் பகிரப் பட்டு வருகிறது. ட்ரம்பின் மீம் தினம் என்று அமெரிக்கர்கள், தங்களது சமூக வலைத்தளப் பக்கங்களில் ஏராளமான மீம்ஸ் களை பகிர்ந்தும், ரீ ஷேர் செய்தும் கொண்டாடி வருகிறார் கள்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


48 ஆண்டுகளாகத் தண்ணீர் குடிக்காத அமெரிக்க பணக்காரர் வாரன் பபெட்!

அமெரிக்காவின் பிரபல முதலீட்டாளரும் கோடீஸ்வரருமான வாரன் பபெட்டின் வழக்கத்திற்கு மாறான உணவு மற்றும் பானப் பழக்கம் தொடர்பான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் மற்றொரு கோடீஸ்வரரான பில் ஆக்மேன் அண்மையில் பேட்டியொன்றில், வாரன் பபெட் கடந்த 48 ஆண்டுகளாகத் தண்ணீர் குடிக்கவில்லை எனக் கூறியதாக தெரிவித்துள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் ஏற்பாடு செய்திருந்த இரவு விருந்தொன்றை நினைவு கூர்ந்த ஆக்மேன், வாரன் பபெட்டுக்கு மிகவும் பிடித்த பானம் என்பதால் Cherry Coke வாங்கி வைத்திருந்ததாகக் கூறினார்.

விருந்தின் போது இருவரும் ஒன்றாக அமர்ந்து உணவருந்திய நிலையில், ஆக்மேன் வாரன் பபெட்டுக்கு தண்ணீர் வழங்கியுள்ளார். ஆனால், அவர் தண்ணீரை ஏற்க மறுத்துள்ளார்.

இதனை அடுத்து, நீங்கள் தண்ணீரே குடிப்பதில்லையா? என ஆக்மேன் கேட்டபோது, நான் தண்ணீர் குடித்து 48 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதை விட கோக் எனக்கு மிகவும் பிடிக்கும் என வாரன் பபெட் பதிலளித்ததாக ஆக்மேன் தெரிவித்துள்ளார்.

வாரன் பபெட் தினமும் சுமார் ஐந்து கேன் கோகோ கோலா அருந்தி வந்ததாகவும் கூறப்படுகிறது. 2015ஆம் ஆண்டு அவர் தன்னை நகைச்சுவையாக கால் பகுதி கோகோ கோலா என வர்ணித்திருந்தார். தனது நாளாந்த



கலோரி உட்கொள்ளலில் சுமார் 25 சதவீதம் கோகோ கோலா மூலம் கிடைப்பதாகவும் அவர் அப்போது தெரிவித்திருந்தார்.

வழக்கத்திற்கு மாறான உணவு மற்றும் பானத் தேர்வுகளைக் கொண்டிருந்த போதிலும், வாரன் பபெட் சுமார் ஆறு தசாப்தங்களாக Berkshire Hathaway நிறுவனத்தை வழிநடத்தி, உலகின் மிகச் சிறந்த முதலீட்டாளர்களில் ஒருவராகப் பெயர் பெற்றுள்ளார். அவர் கடந்த டிசம்பரில் Berkshire Hathaway நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா - கனடா வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை

அமெரிக்கா மற்றும் கனடா இடையே வர்த்தக உறவுகள் தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உடன் சுமுகமான மற்றும் பயனுள்ள உரையாடலை மேற்கொண்டதாக கனடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்ட பிரதமர் கார்னி, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கைக்கான வரைவு குறித்து சமீபத்தில் இடம் பெற்ற ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாகவே இந்த உரையாடல் அமைந்ததாகக் குறிப்பிட்டார்.

இப்பேச்சுவார்த்தை சனிக்கிழமை இடம் பெற்றதாக கனடிய பிரதமரின் அலுவலகம் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

எமது நாட்டின் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும், குடும்பங்களுக்கான செலவினங்களைக் குறைக்கும் அதேவேளையில் கனடாவின் மொழிகள், கலாச்சாரம் மற்றும் இறையாண்மையை முழுமையாகக் கனம்பண்ணும் வகையில் இந்த வர்த்தக உடன்படிக்கை அமையும் என பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார். இந்த இலக்கை எட்டுவதற்கு கனடா மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் வரும்



வாரங்களில் தீவிரமாக உழைப்பார்கள் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கனடாவுடன் மிகச் சிறந்த வர்த்தக உடன்படிக்கைக்கான அடிப்படை வரைவு உருவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கனடாவுடனான வர்த்தகத்தில் கடந்த 70-75 ஆண்டுகளாக நாம் பெருமளவு பணத்தை இழந்து வந்துள்ளோம். எனினும், தற்போது ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு மிகவும் நெருங்கி விட்டோம். கனடிய பிரதமருடன் மீண்டும் பேசினேன். எமது விவசாயிகள் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு நன்மை பயக்கும் வகையிலும், அதே நேரத்தில் கனடாவுக்கும் உகந்ததாக அமையும் வகையிலும் ஒரு நல்ல ஒப்பந்த வரைவு தயாராக உள்ளது' என்று டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இடைத் தேர்தலில் 3 இந்திய வம்சாவழியினர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி) ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிட்ட கறுப்பினப் பெண்ணான கேஷா லான்ஸ் அமோக வெற்றி பெற்று, ஜோர்ஜியா மாகாணத்தின் ஆளுநராவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளமை வரலாற்றில் முதல் முறை நிகழும் சாதனையாக பார்க்கப்படுகிறது. இவர் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ரிச் ஜாக்சனை தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தமிழ்ச்சமூகத்தின் மனநலப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண சமுகமே பொறுப்பேற்க வேண்டும்!



தமிழ் சமூகத்தின் மனநலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தமிழ்ச் சமூகமே ஒன்றிணைந்து பொறுப்பேற்க வேண்டிய நேரம் வந்து விட்டதாகக் கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கேரி ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மருத்துவ பீட வெளி நாட்டு பழைய மாணவர் சங்கத்தின் கனடிய அமைப்பு (JMFOA Canada)> Scarborough Health Network உடன் இணைந்து, ஸ்காபரோ சென்டினரி மருத்துவமனையில் ஏற்பாடு செய்திருந்த Advancing Mental Health Equity for Tamil Communities" என்ற தமிழ் சமூகத்தின் மனநல சமத்துவம் தொடர்பான கலந்துரையாடலில் அமைச்சர் உரையாற்றினார்.

1990களின் இறுதியில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் வன்முறை தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்ட போது, அவற்றை எதிர் கொள்ளச் சமூகம் ஒன்றிணைந்து செயல்பட்டதை அமைச்சர் நினைவுகூர்ந்தார்.

அதேபோன்று தற்போது தமிழ் சமூகத்தில் நிலவும் மனநலச் சவால்களையும் சமூகமே கூட்டுப் பொறுப்புடன் எதிர் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

Ontario Health Scarborough Health Network அல்லது Centre for Addiction and Mental Health (CAMH) போன்ற நிறுவனங்களால் மட்டும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் சமூகத்தின் மனநலப் பிரச்சினைகளுக்குப் பின்னால் தலைமுறைகளைக் கடந்து தொடரும் மனக் காயங்கள் (Intergenerational Trauma) போதைப்பொருள் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் மனநலம் தொடர்பான சமூக அவப்பெயர் (Stigma) உள்ளிட்ட பல்வேறு காரணிகள் இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பல தசாப்தங்களாக மனநலத் துறையில் பணியாற்றி வரும் சமூக ஆர்வலர்களின் முயற்சிகளுக்குப் போதிய அங்கீகாரமும் ஆதரவும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் மனநல நிலை குறித்த ஆய்வறிக்கையை முக்கியமான ஆரம்பப் படியாக வரவேற்ற அமைச்சர், ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களுடன் நின்றுவிடாமல் நடைமுறைச் செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதற்காக TAIBU Community Health Centre போன்ற சமூக அடிப்படையிலான சுகாதார சேவை மாதிரியைப் பரிசீலிக்கலாம் எனவும் அவர் பரிந்துரைத்தார்.

அரசாங்கத்தின் பல்வேறு நிலைகள், மருத்துவ நிறுவனங்கள், கல்வியாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் முன்களப் பணியாளர்களை ஒருங்கிணைக்கும் நீண்டகாலக் கட்டமைப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது ஆரம்பகால சமூகப் பணியின் போது, CanTYD அமைப்பில் பணியாற்றிய காலத்தில், தற்கொலையால் ஓர் இளைஞரை இழந்த அனுபவத்தை அமைச்சர் நினைவுகூர்ந்தார். அதன் பின்னர் ஆண்டுதோறும் தற்கொலை காரணமாக உயிரிழந்தவர்களின் மூன்று, நான்கு அல்லது ஐந்து இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்ட அனுபவம் தனக்கு இருப்பதாகவும் அவர் வேதனையுடன் தெரிவித்தார். இது ஒரு குடும்பத்தின் மிகப்பெரிய இழப்பு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்திற்குமான இழப்பாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

மதுபானம் அருந்தி விட்டு வாகனம் ஓட்டுதல் அல்லது சாலை விபத்துகள் காரணமாக இதே அளவிலான உயிரிழப்புகள் ஏற்பட்டிருந்தால், சமூகம் கடுமையாக எதிர்வினையாற்றி ஒன்றிணைந்து செயல்பட்டிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஆனால் மனநலப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய உயிரிழப்புகளுக்கு அதே அளவிலான சமூகக் கவனம் வழங்கப்படுவதில்லை என அமைச்சர் கவலை வெளியிட்டார்.

தமிழ் சமூகத்தின் மனநல மேம்பாட்டிற்காக நீண்டகாலமாக உழைத்து வரும் மருத்துவர்கள், நிபுணர்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், இந்த முயற்சி ஏற்கனவே நீண்டகாலம் தாமதமாகி விட்டதாகவும் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு மாற்றமும் தென்னிலங்கை இனவாத சக்திகளின் சவால்களும்

இலங்கையில் அனைத்து சமூகங்களினதும் நலன்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்துப் பிரதமர் ஹரிணி அமரசூரிய சி.என்.என். தொலைக்காட்சி நேர்காணலில் வெளியிட்ட கருத்துக்கள் தற்போது அரசியல் வட்டாரங்களில் பெரும் விவாதங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

குறிப்பாக, நாட்டின் நீண்டகால மோதல்களுக்கான ஆழமான வேர்களை புதிய அரசியலமைப்பு மூலம் தீர்க்க வேண்டும் என்ற பிரதமரின் கருத்துக்கு தென்னிலங்கை அரசியலில் உள்ள முன்னாள் எம்.பி.க்களும், பேரினவாத சக்திகளும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

இத்தகையதொரு சூழலில், புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை ஒன்று முன்னெடுக்கப்படுமானால், சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பாகத் தென்னிலங்கை இனவாத சக்திகள் எடுக்கக் கூடிய நிலைப்பாடுகளும் அதனால் ஏற்படும் ஆபத்துக்களும் தீவிரமாக ஆராயப்பட வேண்டியவையாகவுள்ளன.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்துப் பேசப்படும் போதெல்லாம், தென்னிலங்கைச் சக்திகள் இலங்கையின் அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை மற்றும் அதனைப் பாதுகாக்கும் அரசின் கடமை எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் தீவிரமாகச் செயல்படுகின்றன.

சிறுபான்மைச் சமூகங்களின் சம உரிமைகள் மற்றும் மதம் சார்ந்த சுதந்திரங்கள் கோரப்படும்போது அதனைப் பெரும்பான்மை மதத்திற்கு எதிரான அச்சுறுத்தலாகச் சித்திரிக்க இனவாத சக்திகள் முற்படுகின்றன. புதிய அரசியலமைப்புச் செயன்முறை தொடங்கப்படும் பட்சத்தில், நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையைக் கைவிட்டு, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுக்கலாம் என்ற அச்சம் தென்னிலங்கைத் தரப்பில் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது.

13ஆவது திருத்தச் சட்டம் அல்லது மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் (குறிப்பாக நில மற்றும் பொலிஸ் அதிகாரங்கள்) நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைத்துவிடும் என்ற மாயையைத் தீவிர தேசியவாத சக்திகள் தொடர்ச்சியாகப் பரப்பி வருகின்றன. இதனால், தமிழ் பேசும் மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு மற்றும் சுயாட்சி உரிமைகள் என்பவை தொடர்ந்தும் முடங்கும் அபாயமே உள்ளது.

சி.என்.என். நேர்காணல் குறித்தான விமர்சனங்களில் சுட்டிக்காட்டப்பட்டது போன்று, தமிழ் மொழியின் அந்தஸ்து மற்றும் வடக்கு-கிழக்கில் சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் நிர்வாகச் சிக்கல்கள் குறித்துப் பேசப்படும் போதெல்லாம், தென்னிலங்கையில் கடும்போக்கு வாதங்கள் தலை தூக்குகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நிர்வாக ரீதியாகச் சிறுபான்மைச் சமூகம் எதிர்கொள்ளும் புறக்கணிப்புகளைத் தீர்ப்பதற்கான சீர்திருத்தங்களைக் கூட, பெரும்பான்மைச் சமூகத்திற்கு எதிரானவை போன்று சித்தரிக்கும் ஆபத்து காணப்படுகிறது.

தேர்தல் அரசியல் மற்றும் குறுகிய கால அரசியல் இலாபங்களை இலக்காகக் கொண்டு, புதிய அரசியலமைப்பு வரைவு முயற்சிகளைத் தென்னிலங்கை இனவாத சக்திகள் திசைதிருப்பக் கூடும். 'நாட்டின் இறையாண்மை விற்கப்படுகிறது' அல்லது 'நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு ஆபத்தில் உள்ளது' என்ற பொய்யான பேரினவாதப் பரப்புரைகள் மூலம் பெரும்பான்மை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி, எந்தவித நியாயமான அரசியல் தீர்வுகளையும் எட்ட முடியாதவாறு அரசியலமைப்புச் செயன்முறையை முற்றிலுமாக முடக்க இவர்கள் முயல்வர்.

இலங்கையில் உண்மையான சமாதானத்தையும் நிலையான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமாயின், கடந்த காலப் தவறுகளைத் திருத்தி அனைத்துக் குடிமக்களையும் சமமாக மதிக்கக்கூடிய ஒரு புதிய அரசியலமைப்பு அவசியமானது. இருப்பினும், தென்னிலங்கை இனவாத சக்திகளின் குறுகிய அரசியல் நிலைப்பாடுகளுக்கும் காழ்ப்புணர்வுகளுக்கும் டமளித்தால், சிறுபான்மைச்சமூகங்களின் உரிமைகள் மீண்டும் ஒருமுறை பறிபோவதோடு, நாடு மீள முடியாத அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளப்படும் அபாயம் உருவாகும். எனவே, அரசாங்கம் எத்தகைய அழுத்தங்களுக்கும் அடிபணியாமல், துணிச்சலான மற்றும் நீதியான அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தேர்தல் முடிந்ததும் ஈரானைத் தாக்குங்கள் -நெதன்யாகு தெரிவிப்பு

தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர், மீண்டும் ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும் இருப்பினும் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எதிர்பார்த்திருப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதே வேளை, ஈரானுக்கு எதிராக அடுத்த கட்ட தாக்குதலை நடத்தத் தயாராகுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ட்ரம்புக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஈரானுடனான போர் நடவடிக்கைகள் தொடர்பாக நெதன்யாகு ட்ரம்புடன் தொலைப்பேசியில் உரையாடியதாகவும், இருவரும் பேசிக்கொண்ட போது, அமெரிக்க தேர்தல் நடந்து முடிந்தவுடன் ஈரான் மீது தாக்குதல் நடத்த ஆரம்பிக்குமாறு ட்ரம்புக்கு நெதன்யாகு தெரிவித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.

நெதன்யாகு ட்ரம்பிடம் ஈரானுடனான தாக்குதல் தொடர்பில் ஆலோசனை வழங்கியபோதும், ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி, மோதலை சுமூகமாக தீர்க்க ட்ரம்ப் முயற்சிப்பதாகவும் சர்வதேச மட்டத்தில் கருத்துக்கள் உலாவுவதாகவும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.



இதேவேளை ஈரானின் அணுசக்தி திறன்களை அமெரிக்கா பெருமளவில் அழித்துவிட்டதாகவும், இன்னும் எஞ்சியுள்ள ஒன்று அல் லது இரண்டு இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்த வேண்டியுள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் இராணுவ கூட்டாமையைப் பலப்படுத்தும் இந்தியா!

புதுடெல்லிக்கும் கொழும்புக்கும் இடை யிலான பாதுகாப்பு மற்றும் கடற்படை ஒத்துழைப்பு வரலாற்று ரீதியான அரசியல் தடைகளையும் சந்தேகங்களை யும் கடந்து தற்போது ஒரு புதிய மூலோபாய உயர்மட்ட நிலையை எட்டியுள்ளது. புதுடெல்லியின் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமான `ஒப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷன்` வெளி யிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் மாறிவரும் புதிய உலகளாவிய சூ முலும் பாதுகாப்பு சவால்களுமே இந்த நெருங்கிய கூட்டா ண்மைக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளன.

வரலாற்று ரீதியாக, தமிழ் மன்னர்களின் படையெடுப்புகள், 1987ஆம் ஆண்டின் இந்திய அமைதிப்படை வருகை மற் றும் தமிழ் சிறுபான்மையினர் விவகாரத் தில் இந்தியாவின் தலையீடுகள் சிங்கள பௌத்த மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருந்தன.

அதேபோன்று ராஜீவ்காந்தியின் படு கொலைக்குப்பின் இந்தியா நேரடி இராணுவ தலையீடுகளைத் தவிர்த்து வந்தது. இருப்பினும், 2009 போரின் முடிவிற்குப் பின்னர் இந்தியப் பெருங் கடலின் மூலோபாய முக்கியத்துவமும், இலங்கையில் சீனாவின் வளர்ந்து வரும் இராணுவ மற்றும் கடற்படைப் பிரசன் னமும் புதுடெல்லியின் பாதுகாப்பு கவலைகளை அதிகரித்தன. இதனையடு த்து, கொழும்பு பாதுகாப்பு மாநாடு, `மித்ர சக்தி`, `தோஸ்தி` போன்ற பயிற்சி கள் மூலமாக இரு நாடுகளும் நெருங் கிச் செயல்படத் தொடங்கின.

2021 பொருளாதார நெருக்கடிக்குப் பின் இலங்கை தனது இராணுவத்தைச் சீரமைக்கத் தொடங்கிய வேளையில், இந்தியா 6 மில்லியன் டொலர் மதிப் பிலான கடற்படை மீட்பு மையம், மிதக் கும் கப்பல் கட்டும் தளம், டோர்னியர் கண்காணிப்பு விமானங்கள் போன்ற நிதியுதவிகளையும் உபகரணங்களையும் வழங்கியது. இதன் உச்சகட்டமாக, 2025 ஏப்ரலில் கையெழுத்தான 5 ஆண்டுகளு க்கான வரலாற்றுச் சிறப்புமிக்க பாது காப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் அண்மைக்கால இலங்கை விஜயமும் இருநாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவின் பாதுகாப்பு கவலைகளை உணர்ந்து, தனது எல்லைகளை இந்தியப் பாதுகாப்பிற்கு எதிராகப் பயன்படுத்த அனுமதிக்க மாட் டோம் என உறுதியளித்துள்ளதுடன், வெளிநாட்டு ஆராய்ச்சி கப்பல்களுக்கான தடையையும் தீவிரமாகப் பின்பற்றி வருகிறது

இறையாண்மை தொடர்பான சில



உள்நாட்டு விமர்சனங்கள் மற்றும் சீன அழுத்தம் நீடித்த போதிலும், புதிய மற்றும் பாரம்பரியமற்ற அச்சுறுத்தல் களை எதிர்கொள்ள புதுடெல்லியும் கொழும்புவும் முன்னெடுக்கும் இந்த பாதுகாப்புப் பாலம் பிராந்திய அமைதி க்கு மிக முக்கியமானதொரு அடியாகும் என புதுடெல்லியின் கொள்கை ஆராய் ச்சி நிறுவனமானம் சுட்டிக் காட்டியுள் ளது.

நாமலுக்குப் பிணை வழங்கியது நீதிமன்றம்



சர்ச்சைக்குரிய `க்ரிஷ்` பணப்பரிமாற்றம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்க ப்பட்டிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதி மன்றம் 03 நவம்பர் 2026 உத்தரவிட்டு ள்ளது.

அத்துடன் அவருக்கு வெளிநாடு செல்வதற்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.இருப்பினும், அவருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள பிற வழக்குகள் சிலவற்றில் பிணை பெறப் படாத காரணத்தால், அவர் தொடர்ந்து விளக்கமறியலிலேயே இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு கோட்டை, டிரான்ஸ்வொர் க்ஸ் சதுக்கத்தில் (Transworks Squ are) உள்ள காணிகளைப் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்திற்காக `க்ரிஷ்` நிறுவனத்திற்குப் பரிமாற்றம் செய்வத ற்கு வசதி செய்து கொடுத்தமைக்காக, 100 மில்லியன் ரூபாய் லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்குத் தொடர்பான பிணை மனு மீதான தீர்ப்பை வழங்குவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
Barrister, Solicitor & Notary Public



Rajabalini Sasitharan
Barrister, Solicitor & Notary Public

Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

Family Law
- Divorce
- Custody & Support

Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

ட்ரம்புக்கு பலத்த அடி:- அவரது கோட்டைகளில் ஜனநாயகக் கட்சி அலை!

ஜனநாயகக் கட்சியினர் செவ்வாயன்று (03) செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டின் கட்டுப்பாட்டையும் கைப்பற்றினர். இதன்மூலம், பல தலை முறைகளுக்குப் பிறகு முதன்முறை யாக, குடியரசுக் கட்சியின் கோட்டை களாக இருந்த பகுதிகளில் அவர்கள் மகத்தான வெற்றிகளைப் பதிவுசெய்த னர்.

அதே வேளையில் கோடிக்கணக்கான வாக்காளர்கள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்குக் கடுமையான கண்டனத் தைத் தெரிவித்தனர். வெறும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜனாதிபதியை இரண்டாவது முறையாகப் பதவியில் அமர்த்திய பழமைவாதக் கோட்டை களைச் சேர்ந்த வாக்காளர்கள், ஜன நாயகக் கட்சியினரை நோக்கி வியத்தகு முறையில் திரும்பினர்.

ஈரானுடனான மக்கள் ஆதரவற்ற போர் குறித்த ஆழ்ந்த அதிருப்தி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்ட கவலை மற்றும் நாட்டை வழிநடத்திய விதத் தில் ட்ரம்ப் மீது கொண்டிருந்த கோபம் ஆகியவை இந்த மாற்றத்திற்கு முக்கியக் காரணங்களாக அமைந்தன. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தநிலைக்குப் பிறகு, கன்சாஸ் தனது முதல் ஜனநாயகக் கட்சி செனட்டரைத் தேர்ந்தெடுத்தது.

2024ல் ட்ரம்ப் கிட்டத்தட்ட 18 புள்ளி கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மாநிலமான தெற்கு கரோலினாவில், ஜனநாயகக் கட்சியினர் அவரால் தேர்ந் தெடுக்கப்பட்ட செனட் வேட்பாளரைத் தோற்கடித்தனர்.

மேலும் குடியரசுக் கட்சியின் மிகப் பெரிய மாநிலமான டெக்சாஸில், ஜன நாயகக் கட்சியினர் பல தசாப்தங்களாக நீடித்த தோல்விப் பயணத்திற்கு ஒரு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் முற்றுப்புள்ளி வைத்ததுடன், ஒரு செனட் இடத்தைக் கைப்பற்றி யதுடன், மூன்று முறை ஆளுநராக இருந்த கிரெக் அபோட்டையும் பதவியிலிருந்து நீக்கினர்.

குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த காங்கிரஸ் கடந்த இரண்டு ஆண்டுகளாக ட்ரம்ப்பைக் கட்டுப்படுத் தும் தனது அதிகாரத்தை அரிதாகவே பயன்படுத்திய நிலையில், இந்த முடிவு கள் வொஷிங்டனில் பிளவுபட்ட அரசாங்கத்தின் ஒரு புதிய சகாப்தத் தைத் தொடக்கி வைக்கும்.

ஜனவரியில் பதவியேற்றவுடன், ஜனநாய கக் கட்சியினர் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி ட்ரம்பின் நிர்வாகம், குடும்பத்தினர் மற்றும் பங்காளிகளை விசாரிக்கவும், முக்கிய சட்டங்களில் சலுகைகளைக் கோரவும் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட் சபையால், அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி பதவி காலியாகும் பட்சத்தில், ட்ரம்ப் நியமிக்கும் நபர்களை, குறிப் பாக எந்தவொரு நீதிபதியையும் தடுக்க முடியும். அமெரிக்க அரசியலமை ப்பின்படி மூன்றாவது முறையாகப் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டுள்ள ட்ரம்ப், கடந்த பத்தாண்டுகளில் பெரும்பாலான காலம் தனது கட்சி மீது இரும்புப் பிடியை வைத்திரு ந்தார்.

ஆனால், 2028 ஜனாதிபதித் தேர்தலின் மீது கவனம் திரும்புவதாலும், ட்ரம்பிற் குப் பிந்தைய உலகில் சாத்தியமான வாரிசுகள் அரசியல் செல்வாக்கிற்காகப் போட்டியிடத் தொடங்குவதாலும், வொஷிங்டனில் ஏற்பட்டுள்ள புதிய அதிகாரச் சமநிலை, அவரது பதவிக் காலம் முடியப்போகும் நிலையை விரைவுபடுத்தக்கூடும்.

2020ல் செய்தது போல, ட்ரம்ப் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயலக்



கூடும் என்று ஜனநாயகக் கட்சியினர் கவலை தெரிவித்தபோதிலும், ஜனாதிபதி தேர்தல் முடிவை ஏற்றுக்கொண்டு, ஃபோக்ஸ் நியூஸ் உடனான ஒரு நேர்காணலில் ஜனநாயகக் கட்சியினரு க்கு வாழ்த்து தெரிவித்தார்.

குடியேற்றம் போன்ற பிரச்சினைகளில் ஜனநாயகக் கட்சியினருடன் இணை ந்து பணியாற்றுவதாகவும் அவர் கூறினார். இருப்பினும் அவர்கள் நிறை வேற்றும் எந்தவொரு பைத்தியக்காரத் தனமான சட்டமூலங்களையும் வீட்டோ செய்வதாக அச்சுறுத்தினார்.

ஜனநாயகக் கட்சியினர் தங்கள் பிரச்சார த்தை ஊழல் மற்றும் மலிவு விலை மீது மையப்படுத்தினர். செலவுகள் அதிகரித்ததற்கு ட்ரம்பின் சுங்க வரிக் கொள்கையையும் ஈரானுடனான போரை யும் அவர்கள் குற்றம் சாட்டினர்.

அதே நேரத்தில், ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்குத் திரும்பியதிலிருந்து அவரது குடும்பம் சம்பாதித்த பில்லியன் கணக்கான டொலர்களை முன்னிலைப் படுத்தினர். ட்ரம்ப் தலைமையிலான குடியரசுக் கட்சியினர், திருநங்கைகளின் உரிமைகள் போன்ற கலாச்சாரப் போர் பிரச்சினைகள் தொடர்பாக ஜனநாயகக் கட்சியினரைத் தாக்கினர்.

மேலும், தங்கள் எதிராளிகளைத் தீவிர வாதிகள் மற்றும் அதீத சக்தி வாய்ந்த வர்கள் என்று சித்தரித்தனர். ஆனால், ஒவ்வொரு கருத்துக் கணிப்பிலும், வாக்காளர்கள் தங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளிலேயே அதிக அக்கறை கொண்டிருந்ததை தெளிவுபடுத்தினர்.

அதனால் ஜனநாயகக் கட்சியின் அலை நாட்டின் பெரும் பகுதிகளை மூழ்கடி த்தது. செவ்வாய்க்கிழமை இரவு பெரும்பாலான வாக்குகள் எண்ணப் பட்ட சுமார் 1,700 மாவட்டங்களில், ஒரு சிலவற்றைத் தவிர மற்ற அனை த்திலும் குடியரசுக் கட்சியினர் பின்ன டைவைச் சந்தித்ததாக கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன.

மிகவும் செல்வந்த மாவட்டங்களிலும், அதேபோல் மிகவும் ஏழ்மையான மாவ ட்டங்களிலும் ஜனநாயகக் கட்சியினர் முன்னேற்றம் கண்டனர். கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களிலும், அத்தகையோர் குறைவாக உள்ள மாவட்டங்களிலும் அவர்கள் முன்னேற்றம் அடைந்தனர்.

குறிப்பாக, லத்தீனோ மக்கள் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் ஜனநாயகக் கட்சியினரின் முன்னேற்றம் மிகக் குறிப் பிடத்தக்கதாக இருந்தது. இதில் 2024 தேர்தலில் ட்ரம்ப் பக்கம் சாய்ந்த டெக்சாஸின் எல்லை மாவட்டங்களும், கன்சாஸ் சமவெளிப் பகுதியில் உள்ள விவசாய நகரங்களும் அடங்கும்.

1932-ஆம் ஆண்டிற்குப் பிறகு கன்சாஸ் செனட் தேர்தலில் வெற்றி பெறும் முதல் ஜனநாயகக் கட்சியினராக ஆடம் ஹாமில்டன் உருவெடுத்து ள்ளார். அதேபோல் 1988-ஆம் ஆண்டி ற்குப் பிறகு டெக்சாஸ் செனட் தேர்த லில் வெற்றி பெறும் முதல் ஜனநாயகக் கட்சியினராக ஜேம்ஸ் டலாரிகோ திகழ் கிறார். பெரும்பாலும் ஈரான் போரை மையமாகக் கொண்டிருக்கும். மேலும், போரைத் தொடர நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெறுமாறு அல்லது மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நிதியை நிறுத்துமாறு ஜனநாயகக் கட்சியினர் ட்ரம்பிற்கு உத்தரவிடக்கூடும்.

கந்தரோடைக்கு வந்து பரபரப்பை ஏற்படுத்திய புத்தர் திரும்பிச் சென்றார்!



யாழ்ப்பாணம், கந்தரோடை தொல்லியல் பகுதியில் புதிதாக வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை மீண்டும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி. பிரகாஸ் அறிவித்துள்ளார். சுன்னாகம் - கந்தரோடை பகுதி யில் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள புராதன பௌத்த சின்னங் கள் அமைந்துள்ள வளாகத்தில், கடந்த சனிக்கிழமை தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த குழுவினர் புத்தர் சிலை ஒன்றை நிறுவி, 'பிரித்' ஓதி வழிபாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் சனிக்கிழமை இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வுகளுக்காகவே தற்காலிகமாக புத்தர் சிலை கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டதாகவும், பூசைகள் நிறைவடைந்த பின்னர் அச்சிலை உடனடியாக அங்கிருந்து மீள எடுத்துச் செல்லப்பட்டு விட்ட தாகவும் தவிசாளரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளிடம் பிரதேசசபை தவிசாளர், பிரதேச சபையின் உரிய அனுமதிகள் இன்றி முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் எதிராக நீதிமன்றம் ஊடாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் திட்டவட்டமாக எச்சரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கந்தரோடை பகுதி தொல்லியல் திணைக்களத்தின் பராமரிப்பில் உள்ள ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புராதன தளமாகும். அப்பகுதியில் உள்ளூர் அதிகார சபைகளின் அனுமதியின்றி புதிய மத அடையாளங்களை அமைப்பதோ அல்லது வழிபாடுகளை முன்னெடுப்பதோ அண்மைக்காலமாக வடபகுதியில் தொடர்ச்சியான சர்ச்சைகளைத் தோற்றுவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் பொது இடங்களில் நிர்வாணமாக இருக்க அனுமதி கோரி மனுத் தாக்கல்!



கனடாவில் பொது இடங்களில் நிர்வாண மாக இருக்க அனுமதி கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கனடாவில் பொது இடங்களில் பாலியல் நோக்க மின்றி ஆடைகளின்றி இருப்பதற்கு சட்டப்பூர்வ அனுமதி அளிக்கக் கோரும் மனு ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டா வது முறையாக, கனடா பசுமைக் கட்சியின் தலைவர் எலிசபெத் மே இந்த மனுவுக்கு ஆதரவளித்து நாடாளுமன்றத் தில் தாக்கல் செய்ய ஸ்பான்சர் செய் துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஜிப்சன்ஸ் பகுதியைச் சேர்ந்த ஸ்காட் பிளீக்லி என்பவரால் இந்த மனு தொடங்கப்பட்டு ள்ளது. கனடியர்களில் கணிசமானோர் ஆடைகளின்றி இயற்கை சூழலை அனுபவிப்பதை விரும்புகிறார்கள். எனவே ஆபாசமான அல்லது சட்ட விரோதமான நடத்தைகள் இல்லாத பட்ச த்தில் பொது இடங்களில் ஆடைகளின்றி இருக்க அனுமதிக்க வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

பொது இடங்களில் ஆடைகளின்றி இருப்பதைத் தடை செய்யும் தற்போ தைய குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும், 'ஆடை யின்றி இருப்பது மட்டுமே ஆபாசமான செயல் ஆகாது எனச் சட்டப்பூர்வமாக வரையறுக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிலும் எலிசபெத் மே இதே போன்ற ஒரு மனுவுக்கு ஆதரவளித்திருந்தார்.

எனினும், அவர் இந்த கோரிக்கையை தனிப்பட்ட முறையில் ஆதரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். மக்களின் கோரிக்கைகளை அரசுக்குக் கொண்டு சேர்ப்பதும், அவற்றுக்கு அரசு பதிலளிப் பதை உறுதி செய்வதும் ஒரு நாடாளு மன்ற உறுப்பினரின் கடமையாகும். மனுவை தாக்கல் செய்வதால் மனுதாரரின் கருத்துக்களை எம்பி முழுமையாக ஏற்கிறார் என்று அர்த்தமல்ல என பசுமைக் கட்சியின் செய்தி தொடர்பாளர் விளக்கமளித்துள்ளார்.

கனடா நாடாளுமன்றத்தில் ஒரு மனு பரிசீலிக்கப்பட வேண்டுமெனில் குறைந்த பட்சம் 500 பேரின் கையெழுத்துகள் தேவை. தற்போதைய மனுவிற்கு மார்ச் 2 வரை கால அவகாசம் உள்ள நிலையில், ஏற்கனவே 360க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளனர்.

வான்கூவரின் ரெக் பீச் போன்ற சில குறிப்பிட்ட ஒதுக்கப்பட்ட பகுதிகளில் ஆடைகளின்றி இருக்க ஏற்கனவே சட்ட ப்பூர்வ அனுமதி உள்ளது. மேலும், பிரிட்டிஷ் கொலம்பியா உட்பட பல மாகாண நீதிமன்றங்கள் பெண்கள் பொது இடங்களில் மேலாடையின்றி இருப்பதற்கான உரிமையை உறுதி செய்துள்ளன. எனினும், பிறருக்குத் தெரி யும் வகையில் சொந்த இடத்தில் ஆடை களின்றி இருப்பதும் கூட தற்போதைய சட்டப்படி சில நேரங்களில் குற்றமாகக் கருதப்படலாம் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கை அரசியலில் 2 வருடங்களுக்குள் பாரிய மாற்றம்



ஆட்சி அதிகாரத்தைப் பெற்று இரண்டு வருடங்களுக்குள் அரசியல் துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

31 ஒக்டோபர் 2026 நடைபெற்ற தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இக்காலப்பகுதியில் அரசியல் அதிகாரத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்த்துள்ளதாக ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஆட்சி அதிகாரத்தைப் பெற்று இரண்டு வருடங்களுக்குள் அரசியல் துறையிலேயே நாம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம். அரசியல் அதிகாரத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்த்துள்ளோம். இவ்வாறானதொரு மாற்றமானது, பழைய சமூக அமைப்பில் சிறப்புரிமைகளையும் பாதுகாப்பையும் அனுபவித்த சிறிய குழுக்களால் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகும். உலகெங்கிலும் இத்தகைய மிகப்பெரிய மாற்றங்களுக்கு எதிராகப் பழைய சமூக அமைப்பின் பகுதியினர் கிளர்ந்தெழ முயல்கின்றனர்.

இருப்பினும் சமூகம் இந்த மாற்றத்துடன் கைகோர்த்து நிற்கிறது. ஏதேனும் சந்தேகம் உள்ள மக்கள் இருப்பார்களேயானால், கிராமங்கள் தோறும் சென்று மக்களின் மனசாட்சியை விழிப்படையச் செய்து அவர்களை நம்முடன் இணைத்துக்கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இந்த மாற்றத்தின் முன்னோடிகளாகவும், பாதுகாவலர்களாகவும், வழிகாட்டிகளாகவும் தயாராக வேண்டும் ஏனெனில், பழைய அரசியலின் எச்சங்கள் இந்த மாற்றங்களுக்கு எதிராக எழும்புகின்றன, அதனைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றன.

சமீபத்தில் ஒருவர் கூறுகிறார், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ருவன்வெலி சாய தூபியை நிலத்தில் மூழ்கடிப்பதற்குத் திட்டமிடுகிறது என்று. இவ் வாறானதொரு விஷயம் எவ்வாறு சாத்தியமாகும்? இந்த மாற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் போகும் போது மனக்குழப்பம் ஏற்படுகிறது. அவர்களின் கூற்றுகள் வெறுப்புப் பேச்சுகளாகவும் கற்பனைகளாகவும், அவர்களின் நடத்தைகள் குழப்பமான கேலிக்கூத்துகளாகவும் மாறியுள்ளன.

களிமண் உருவங்களில் ஊசிகளைக் குத்துவது போன்ற விகாரமான மன நிலைகள் மூலம் வெளிப்படுவது. இந்த அதிர்ச்சியையும் குழப்பத்தையும் தாங்கிக்கொள்ள முடியாமல் தவிப்பதே ஆகும். முறையான, அமைப்பான மற்றும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட அரசியல் இயக்கங்கள் அல்லது போராட்டங்களால் ஒரு நாட்டிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

அவை சமூகத்திற்கு ஸ்திரத்தன்மையைக் கொண்டு வருகின்றன. ஆனால், அமைப்பற்ற, தொலைநோக்குப் பார்வையற்ற, அமைதியற்ற மற்றும் குழப்பமான மனநிலை கொண்ட குழுக்கள் சமூகத்தில் ஓர் அராஜக குறிப்பிட்ட அபாயத்தைக் கொண்டுள்ளன.

எனவே, உங்களது போராட்டங்களை முறையானதாகவும் தொலைநோக்குப் பார்வையுடனும் நடத்துங்கள் என எதிர்க்கட்சியினரிடம் கோருகின்றோம். இந்த அராஜகமான மற்றும் தொலை நோக்குப் பார்வையற்ற போராட்டங்களுக்குள்ளேயே அதற்கான அழிவின் அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளதால், அதுவே அதனை அழிவை நோக்கி கொண்டு செல்லும். எனவே நாம் பதற்றமடையத் தேவையில்லை என்றாலும், தொடர்ச்சியாக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

நமது மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், வங்கியாளர்கள், விஞ்ஞானிகள், ஓய்வுபெற்ற இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் பிரதிநிதிகளே, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மாற்றத்தைப் பெற்றுத் தந்தது நீங்கள்தான்.

இந்த அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் ஒரு திருப்புமுனையாகவும் மாற்றமாகவும் நான் நம்புகிறேன். ஆனால், அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் நமக்கு பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

அந்த மாற்றத்திற்காக நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, ஒரே மனதுடன் பணியாற்றுவோம், சவால்களை எதிர் கொள்வோம், ஒன்றுபடுவோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Vilosanan Sivatharman
416-993-0826



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

இந்திய - சீனா உறவுகளுடான பெலவத்தையின் அரசியல் நகர்வு எத்தனை வருட ஆயுளுக்கானது!

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

அநுர குமர திஸ்ஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளை முழுமையாக பூர்த்தி செய்துள்ளது. முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க எல் போர்ட் அரசாங்கம் என வர்ணித்த அநுர குமர அரசு நியமப்படி பார்க்கின் அடுத்த தேர்தலை நோக்கி காய்களை நகர்த்த வேண்டிய காலத்துள் வந்துள்ளது.



ஆட்சிக்கு வந்ததும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமென கொடுக்கப் பட்ட வாக்குறுதி காற்றோடு கலந்து விட்டதென எதிர்க்கட்சிகள் கோச மிட்ட போதிலும் அது பற்றி அக் கறை காட்டும் நிலை ஆட்சித்தரப்பில் காணப்படவில்லை. ஊழல் – இலஞ்ச ஒழிப்பு, பொருளாதார ஊக்குவிப்பு, ,ளையோர் வேலைவாய்ப்பு, புதிய கல்வித்திட்டம் என்பவற்றோடு சர்வ தேச ஒத்துழைப்பை நீட்சிப்படுத்துவ தில் அதீத அக்கறை காட்டி வரு கிறது.

முன்னைய ஆட்சிக் காலங்களில் குறிப் பிட்ட ஒரு குடும்பத்தின் ஆட்சியே சட்டத்தின் இறுக்கமான கரங்களுடன் இயங்கியதற்கு பழி வாங்கப்படுவதாக அண்மைய நீதிமன்ற நடவடிக்கை களுக்கு விமர்சனம் உள்ளது. இது பற்றி ஆட்சிபீடம் அலட்டிக் கொள்வ தாக இல்லை. யார் என்ன சொன்னா லும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அரசாங்கம் எதனையும் செய்ய மாட் டாது, அந்தத் தீர்ப்பை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் என்ற நிலைப் பாட்டை செயற்பாட்டில் காட்டி வரு கிறது.

22ம் அரசியல் திருத்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு எழுச்சி களும் மேற்கொள்ளப்பட்ட வேளை யிலும் இந்த நிலைப்பாட்டிலேயே அரசு அரசு இருந்தது. நீதிமன்றத் தீர்ப்பு அரசியல் திருத்தத்துக்கு சாதக மாக அமைந்ததால் அதனை நிறை வேற்றுவது ஆட்சித்தரப்புக்கு இலகு வாகி விட்டது.

சோசலிஸ இடதுசாரி சிந்தனையுள்ள ஓர் அரசு இவ்வாறு தான் இயங்கு மென்று சிலர் கருத்துக் கூறினாலும் பெலவத்தை அந்தக் கருத்துள்ள பெயரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு நகரத்தின் பெயர் (பெலவத்தை) இன்று அரச தரப்பில் முடிவெடுக்கும் தளமாக மாற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க லாம்.

மேற்கு மாகாணத்தில் கொழும்புக்கு அண்மித்ததாக உள்ள பத்தரமுல்ல என்ற இடத்தில் பெலவத்தை நகரம் உள்ளது. இங்கு தான் ஜே.வி.பி.யின் (தேசிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சி) தலைமைப்பீடம் அமைந்துள்ளது. ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் உறுப்பினர்களும் ஆதர வாளர்களும் லொக்கு ஐயா (பெரிய ண்ணா) என அழைக்கும் ரில்வின் சில்வா இங்கிருந்தே செயற்படுகிறார் அல்லது ஆட்சியை வழி நடத்து கிறார் என்று சொல்லலாம். ஏறத்தாழ 20 வருடங்களுக்கு மேலாக ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் பதவியை வகித்து வருகிறார்.

கடந்த வருட வரவு செலவுத் திட்ட த்தில் மாகாண சபைகளின் தேர்தலுக் கென 500 பில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டது. அதன் பின்னர் ஏற்பட்ட திக்வா புயல் அழிவிலிருந்து நாட்டை மீட்டு புனரமைக்க அந்த நிதி செல விடப்பட்டதால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது போய் விட்டதாக ரில்வின் சில்வா அறிவித்தி ருந்தார். ஆனால், அமைச்சர் ஒருவர் அதனை மறுதலித்து கருத்துக் கூறி யிருந்தார். இதற்காக அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ரில்வின் சில்வா சொன்னது போல மாகாண சபைத் தேர்தல் இதுவரை இடம்பெறவில்லை. சிலவேளை இந்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய வரவு செலவுத் திட்டத்தில் மீண்டும் ,த்தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படலாம். ஆனால், தேர்தல் நடைபெறுமென்ப தற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

பொதுவெளியிலும் சர்வதேச மட்டத்தி லும் தேசிய மக்கள் சக்தி அரசை இடதுசாரி ஆட்சியென்றே சொல்லிக் கொள்கின்றனர். ஆனால், ரில்வின் சில்வா அதனை மறுத்தே வருகிறார். தேசிய மக்கள் சக்தி அரசானது ஓர் இடதுசாரி அரசாங்கம் அல்ல என்று கூறும் ,வர், ,தனை இடதுசாரி, ஜனநாயக மற்றும் முன்னேற்ற சக்தி (ours is not a leftist government but one of leftist democratic and progressive forces) என்றே மீண்டும் மீண்டும் கூறிவருகிறார்.

பெரும்பாலான உலக அரசாங்கங்களின் கொள்கைகளை உள்ளடக்கியதான ஒரு சொல்லாடல் இது. கம்யுனிச சித்தாந்த ஆட்சி நடைபெறும் நாடு களில் ஆட்சிப் பொறுப்பிலுள்ள கட்சி களுக்கு தலைமை என்பது இல்லை. மத்திய செயற்குழு ஒன்று கட்சிக்கு பொறுப்பாக இருக்கும். அதன் பொது ச்செயலாளரே தலைமை நிர்வாகியாக ,ருப்பார். ,தன்படி பார்க்கின், ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளகராகவிருக்கும் ரில்வின் சில்வா தேசிய மக்கள் சக்தி யின் ஆட்சியில் எந்தவொரு பதவி யிலும் இல்லாதிருப்பினும் கம்யுனிச கட்டமைப்பிலான வழியில் அரசாங்க த்தின் முடிவுகளை தீர்மானிக்கும் குழு வின் சக்தியாக இயங்குவதை அவதானிக்கலாம்.

இதற்கு உதாரணமாக இப்போது அரசியல் பொருளாதார நிலைப்பாட்டில் முன்னணியிலுள்ள இரண்டு நாடுகளுட னான நட்புத் தொடர்பாடலுக்கு இவரே பொறுப்பாகவுள்ளார். இதனை அவரே பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார்:

இந்தப் பிராந்தியத்தில் இந்தியா எமது அயலவர். இந்த நாட்டுடன் நட்பாகப் பழகாது நாங்கள் முன்னேற முடியாது. இந்தப் பிராந்தியத்தில் சீனா மிக வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் ஒன்று. இந்த இரண்டு நாடுகளுக்கு மிடையில் பிரச்சனை உள்ளது. இதில் எமக்கு சம்பந்தமில்லை. ஆனால், இந்த இரு நாடுகளின் உதவியும் எமக்குத் தேவை. எமது வெளிநாட்டுக் கொள்கை அணி சேராதது. நாங்கள் எவர் பக்கமும் சாயவில்லை என்று விளக்குகிறார்.

இதனை நிரூபிக்கும் வகையில் சீன தேசத்துக்கு தமது குழுவோடு சென்று வந்துள்ளார். எந்த நாட்டிலும் ஒரு கட்சி புதிதாக ஆட்சியமைத்தால் அதன் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற 10-15 வருடங்கள் அக் கட்சி ஆட்சியில் இருக்க வேண்டு மென சீனத் தலைவர்கள் தம்மிடம் தெரிவித்ததாக ரில்வின் சில்வா அப் போது ஊடகங்களுக்குக் கூறியிருந்த தது முக்கியமான கருத்து.



இந்தியாவுக்கும் தமது குழுவோடு சென்று வந்துள்ளார். இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பும் பாரதிய ஜனதா கட்சி பிரமுகர்களுடனான சந்திப்பும் முக்கியமானவை.

இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய் யும் இந்திய, சீன அரசியல் தலைவர் கள் பெலவத்தை சென்று ரில்வின் சில்வாவுடன் உரையாடுவதை முக்கிய நிகழ்வாக மேற்கொண்டு வருகின்றனர். கொழும்பிலுள்ள சீனத் தூதுவரும் இந்தியத் தூதுவரும் கூட பெலவ த்தை சென்று வருவதை தங்கள் நிகழ்ச்சி நிரலில் நிரந்தரமாக்கியுள்ளனர். கடந்த வாரமும் கூட கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் பெலவத்தை சென்று ரில்வின் சில்வாவுடன் பேச்சு நடத்தியது ஊடகங்களில் ஒளிப்படத் துடன் வெளியானது.

அநுர குமர திஸ்ஸநாயக்க ஜனாதிபதி யாக இருக்கின்ற போதிலும் அவரு டன் இவ்வாறான சந்திப்புகளை பல ரும் மேற்கொள்வதில்லை. இந்திய — சீன பிரமுகர்களைத் தவிர ஆஸ்திரே லியா, அமெரிக்கா, மலேசியா, வியட் நாம், சுவிட்சர்லாந்து உட்பட்ட வேறு சில நாடுகளின் பிரமுகர்களும் தூது வர்களும் பெலவத்தை சென்று ரில்வின் சில்வாவுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் வேறு எந்தவொரு அரசியல் கட்சியின் செய லாளருடனும் வெளிநாட்டு பிரமுகர்கள் கட்சி அலுவலகம் சென்று சந்தித்தது மிகக்குறைவு. ஆதனால், ரில்வின் சில்வாவுடனான சந்திப்புகள் மற்றைய அரசியல் கட்சிகளால் பல்வேறு சந்தே கத்துடனும் அச்சத்துடனும் பார்க்கப் படுகிறது. சீனாவுடனும் இந்தியாவுட னும் வெவ்வேறு இலக்குடன் ரில்வின் சில்வா இணங்கிப் போவது எதிர் காலத்தில் இலங்கை அரசியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தலாமென சந்தே கிக்க வைக்கிறது.

1971 மற்றும் 1977-1981 காலப்பகுதி களில் ஆயுதம் ஏந்திய புரட்சி வழியாக ஆட்சியை கைப்பற்ற முனைந்த ஜே.வி.பி. ஆயிரக் கணக்கான தோழர்களை இழந்த பின்னர் ஜனநாயக வழியில் தேசிய மக்கள் சக்தியாக வடிவமெடுத்து ஆட்சிக் கதிரைக்கு வந்துள்ளது. இவர்களுடைய அடிப் படையான இலக்கு எதுவாக இருக் கும்? நாட்டின் எதிர்கால அரசியல் பாதை இவர் களால் எவ்வாறு செப்பனிடப்படும்?

இடதுசாரி, ஜனநாயக மற்றும் முன்னே ற்ற சக்தி என தங்களால் நிர்மாணிக் கப்பட்ட ஆட்சிப் பீடத்தை உரு வாக்கியுள்ளவர்களிடம்ருந்து மக்கள் எதிர்பார்ப்பது எதுவாக இருக்கும்? அதனை ஒரு தவணை ஆட்சியில் இவர்களால் நிறைவேற்ற முடியுமா?

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக் காலத் தில் ஏழு வருடம் சிறைத்தண்டனை பெற்ற ஜே.வி.பி.யின் மூத்த உறுப்பின ரான (லொக்கு ஐயா) ரில்வின் சில்வா, அதன் பொதுச்செயலாளர் பதவியில் அமர்ந்திருக்கையில் வெறும் றப்பர் முத்திரையாக இருக்க விரும்ப மாட் டார்.

அதனை அவரது தோழர்களும் அனு மதிக்க மாட்டார்கள். அவர் கூறும் இடதுசாரி, ஜனநாயக மற்றும் முன்னேற்ற சக்தி ஆட்சி முழுமையாக உருவாக பெலவத்தைக்கு இன்னமும் எத்தனை ஆண்டுகள் வேண்டும்?

15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

31 ஒக்டோபர் 2026 முதல் 06 நவம்பர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

14வது ஆண்டு நினைவஞ்சலி



திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம் பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

1வது ஆண்டு நினைவஞ்சலி



திரு இளங்குமரன் சிவஞானம்

வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 01 நவம்பர் 2026 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

30வது ஆண்டு நினைவஞ்சலி



திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

நினைவழியா நினைவுகள்



திருமதி சத்தியபாமா கௌரி குகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாள் 28 ஒக்டோபர் 2026 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சத்திய பாமா கௌரி குகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

17வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி பொன்னையா அன்னம்மா

கச்சாய் வீதி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாள் 21 ஒக்டோபர் 2026 புதன்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

15வது ஆண்டு நினைவஞ்சலி



திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 15வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



21 ஒக்டோபர் 2026 புதன்கிழமை யாழ்.கச்சாய் வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 24 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 ஒக்டோபர் 2025 ஞாயிற்றுக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மயூரன் அவர்களின் 34வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு மயூரன் அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோபர் பீற்றர் ஆன் இணையர்களின் செல்வப்புதல்வன் எரின்டன் பீற்றரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் எரின்டன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த லெட்.கேணல் நாதன் என்று அழைக்கப்படும் திரு கந்தையா பேரின்பநாதன் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது சகோதரி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.



26 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 ஒக்டோபர் 2026 புதன்கிழமை ஹட்டன் நவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



30 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை இங்கிலாந்தில் (UK) வாழும் டாக்டர் திரு அரங்கன் அஸ்மிதா இணையர்களது 7வது இனிய திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 நவம்பர் 2026 ஞாயிற்றுக்கிழமை வேலணை மேற்கு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டவா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இளங்குமரன் சிவஞானம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 நவம்பர் 2026 செவ்வாய்க்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா தர்மபாலன் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



ஞானசார தேரர் விடுவிக்கப்படுவார்!

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய அரசியல் பிரமுகர் பாராளுமன்ற உறுப் பினர் ஒருவரை கடந்த வாரத்தில் சந்தித்த போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் உள்வீட்டு தகவல் களை பகிர்ந்துக்கொண்டார். ஞானசார தேரரின் கைது குறித்து அவர் குறிப் பிடுகையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனக்குத்தானே தேடிக் கொண்ட ஒரு தேவையற்ற நெருக்கடி தான் ஞானசார தேரரின் கைது மற்றும் காவி ஆடை விவகாரம். நல்லாட்சி அரசாங்கத்தின் போதும் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அன்று அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசாங்கம் அவரது காவி உடையில் கை வைக்க வில்லை.

ஏனெனில், அத்தகைய ஒரு நடவடி க்கை பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பாரிய கொந்தளிப் பையும் எதிர்வினையையும் ஏற்படுத் தும் என்பதை அரசியல் அனுபவம் மிக்க ரணில் நன்கு அறிந்திருந்தார். இதனால் அன்று அந்த விவகாரம் ஒரு பெரிய அரசியல் பேசுபொருளாக மாறாமல் கடந்துபோனது.

ஆனால், ஒரு நாட்டை ஆளுவதற்கு அரசியல் அனுபவம் எந்தளவிற்கு அத்தியாவசியமானது என்பதை தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய செயற் பாடுகள் அனைவருக்கும் தெளிவாக உணர்த்தியிருக்கின்றன. தமது அதி காரப் பெருமிதத்தால் காவி உடை யைக் களைந்ததன் மூலம், சந்தர்ப்பத் திற்காகக் காத்திருந்த இனவாதச் சக்தி களின் கைகளில் அரசாங்கமே ஒரு பெரிய ஆயுதத்தைக் கொடுத்து விட்டது. இதன் விளைவாக, காவி ஆடை விவகாரத்தையும் தாண்டி, தற்போது ஞானசார தேரருக்கு ஜனாதி பதி பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வரை பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்து ள்ளது.

இந்த விடயத்தில் தமது தீர்மானத்தை நியாயப்படுத்தி உறுதியாக நிற்பதாகக் காட்டிக் கொண்ட அரசாங்கம், இத் தனை பெரிய எதிர்ப்பு கிளம்பும் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை. 'ஒரு தனி நபருக்காகச் சட்டத்தை மாற்ற மாட்டேன்' என்று மேடைகளில் வீர வசனம் பேசிய ஜனாதிபதிக்கு, கண்டி யில் தொடங்கிய பௌத்த தேரர்களின் பாதயாத்திரை கொழும்பை வந்தடை வதற்குள்ளாகவே, சிறைச்சாலைகள் கட்டளைச் சட்ட ஒழுங்குவிதிகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அரசாங்கத்தின் இந்த பின்வாங்கல் இனவாதிகளுக்கு மேலும் சாதகமாக அமைந்து விட்டது. ஆரம்பத்தில் அரசாங்கம் அமைதி காத்திருந்தால் அவர்கள் தம் வழியில் சென்றிருப்பார் கள். ஆனால், தற்போது அழுத்தங் களைக் கொடுத்தால் அரசாங்கம் வளை ந்து கொடுக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டதால், தங்களின் கோரிக்கையைப் பொதுமன்னிப்பு வரை கொண்டு சென்றுவிட்டனர்.

இந்த விவகாரம் மேலும் தீவிரமடை ந்தால் அரசாங்கத்திற்குப் பாரிய நெருக் கடி உருவாகும் என்பதை உணர்ந்த ஜனாதிபதி, அடுத்ததாக ஒரு புதிய பேசுபொருள் வரும் வரை இந்த விவ காரத்தைக் கிடப்பில் போட்டு, பின்னர் ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்கத் தீர்மானித்து விட்டார். நீதி, மன்ற அவமதிப்பு வழக்கு என்பதால் பொதுமன்னிப்பு வழங்குவது எளிதாகி விட்டது. இன்னும் சில மாதங்களில் இது நிச்சயமாக நடக்கும் என்றார்.

ரணிலின் இரகசியக் காய் நகர்தலும்வீழ்ச்சியில் அத்திவாரமும்

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் இராஜ தந்திரத்தை அரசாங்கம் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது. 40 ஆண்டுகளுக்கும் மேலாகச் தீவிர அரசியலில் இருக்கும் அவருக்கு, இந்த நகர்வுகள் எங்கு போய் முடியும் என்பது நன்றாகவே தெரியும். இந்த விவகாரம் குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வெறும் ஊடக அறிக்கை அல்ல, அதன் பின்னணியில் ஆழமான அரசியல் நோக்கம் உள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைவேன் என்று தெரிந்தும் ரணில் போட்டியிட்டார். சஜித் பிரேம தாச வெற்றி பெறக் கூடாது என்பதே அவரது ஒரே இலக்காக இருந்தது. 'சஜித் வெற்றி பெற மாட்டார் எனவே அநுரவுக்கு வாக்களியுங்கள்' என்று அவர் மேடைகளில் கூறியது விளை யாட்டல்ல. ரணில் போட்டியிடாமல் சஜித்தை ஆதரித்திருந்தால் சஜித் எளி தாக வெற்றி பெற்றிருப்பார். ரணிலின் மறைமுக ஆதரவே அநுர குமார திசா நாயக்கவை ஆட்சியில் அமர்த்தியது.

அவ்வாறு இருந்தும், அநுரவின் ஆட்சியில் தான் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவேன் என்று ரணில் எதிர்பார்க்கவில்லை. சிறையில் அவரைச் சந்தித்த போது, 'அநுர எனக்கு இப்படி செய்வார் என்று நான் நினைக்கவில்லை' என்று அவர் கூறிய வார்த்தைகளுக்குள் பெரிய அரசியல் இருக்கிறது. அன்றே அநுர அரசாங்கத்திற்கான கெடு தொட ங்கி விட்டது. ரணில் வெளியில் தீவிர அரசியலில் ஈடுபடாதது போல் தோன்றி னாலும், பின்னணியில் மிக இலாவக மாகக் காய்களை நகர்த்தி வருகிறார். இதனால் அரசாங்கத்தின் அத்திவாரம் ஆடத் தொடங்கியுள்ளது. எதிர்க்கட்சி கள் இணைந்து இந்த அரசாங்கத்தை வீழ்த்த வேண்டிய அவசியமில்லை, இவர்கள் செய்த தவறுகளால் தாமா கவே விழுவார்கள் என்று குறிப்பிட் டார்.

ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக நடுத்தர வர்த்தகம்

இலங்கை மக்களின் அரசியல் அறிவு மிகவும் முதிர்ச்சியானது. 2010இல் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த மஹிந்த ராஜபக்ஷ, 2015இல் யாரும் எதிர்பாராத வகையில் மைத்திரிபால சிறிசேனவிடம் தோற்கடி க்கப்பட்டார். பின்னர் 2019இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு கோட்டாபய ராஜப க்ஷ ஆட்சிக்கு வந்தார் ஆனால் இரண்டே ஆண்டுகளில் மக்கள் அவரை வீட்டிற்கு அனுப்பினர். அதன் பின்னர் ரணிலின் ஈராண்டு கால ஆட்சிக்குப் பிறகு, இன்று தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இருக்கிறது.

2010க்குப் பிந்தைய இலங்கையின் அரசியல் போக்கை உற்றுநோக்கினால், எந்தவொரு அரசாங்கமும் தொடர்ந்து இரண்டாவது முறை ஆட்சியமைக்க வில்லை என்பதை அறியலாம். நாட்டில் பெரும்பான்மையாக உள்ள நடுத்தர வர்க்க மக்களே இலங்கையின் ஆட்சி யைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கு கின்றனர். பொருளாதார ரீதியாக ஓரளவிற்கு ஸ்திரத்தன்மை கொண்ட இவர்கள், வெளிப்படையாக அரசியலில் ஈடுபடா விட்டாலும், தங்களின் பொரு ளாதாரத்தில் அரசாங்கத்தின் முடிவுகள் பாதிப்பை ஏற்படுத்தும் போது ஆட்சி யாளர்களைத் தூக்கியெறியத் தயங்குவ தில்லை. அரசாங்கம் இந்த வர்க்கத்தின ரின் நிலைப்பாட்டை மதிப்பீடு செய்யா மல், பழி வாங்கும் அரசியலிலேயே கவனம் செலுத்துகிறது. பழிவாங்கல் அரசியல் என்றாவது ஒருநாள் தங்களையே திருப்பித் தாக்கும் என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும் என அனுபவ ரீதியாக குறிப்பிட்டார்.



விஜய் காட்டும் அரசியல் ஆளும் தரப்பிற்கு ஒரு பாடம்

அண்டைய மாநிலமான தமிழகத்தின் அரசியல் சூழலை நோக்கினால், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் ஜோசப் விஜய் மிகவும் முதிர்ச்சியோடு நடந்து கொள்வதைக் காண முடிகிறது. தேர்தல் மேடைகளில் ஊழல் மற்றும் மோசடிகளுக்கு எதிராக அவர் கடுமை யாகப் பேசினாலும், வெற்றிக்குப் பிறகு முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலினை நேரில் சென்று சந்தித்தார். இதுவரை எந்தவொரு முக்கிய புள்ளியையும் அரசியல் பழிவாங்கல் நோக்கத்திற்காகக் கைது செய்யவில்லை.

முதன்முறையாக முழுநேர அரசியலு க்குள் களமிறங்கியுள்ள விஜய்யிடம் இருக்கும் அந்த அரசியல் சாணக்கி யம், துளியளவும் தேசிய மக்கள் சக்திக்கு இல்லை. எதிராளிகளை வரிசையாகச் சிறையில் அடைத்து விட்டால் மட்டுமே மக்கள் திருப்தி யடைந்து விடுவார்கள் என்று அரசாங் கம் தவறாகக் கணக்குப் போடுகிறது. அனுபவமின்மையும் பழிவாங்கல் போக்கும் தொடர்ந்தால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கான வீழ்ச்சி வெகு தொலைவில் இல்லை என்றும் பெயர் குறிப்பிடாத ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

முடிவுக்கு வந்த சத்தியாக்கிரகமும் அடங்காத தணலும்

பௌத்த பிக்குகளின் சத்யாகிரஹப் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்திருந்தாலும், அதற்கு ஆதாரமாக அமைந்த பிரச்சினை இன்னும் சாம்ப லுக்குள் இருக்கும் தணல் போல் புகைந்துகொண்டு தான் இருக்கிறது. இந்த விடயத்தை முன்னாள் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்றக் குழு சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு புதன்கிழமை இடம் பெற்றிருந்தது. ஞானசார தேரர் விடுதலை தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியுடன் பேசியுள்ள னர். அதே போன்று சத்யாகிரகத்தில் ஈடுபட்ட பிக்குகளும் மகாநாயக்க தேரர் களுடன் கலந்துரையாடியுள்ளனர். இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. சத்யாகிரகத்தைக் கைவிடுமாறு மகா நாயக்க தேரர்கள் சம்பந்தப்பட்ட பிக்கு களுக்கு அறிவித்தனர். தற்போது அரசாங்கம் இதற்கு ஏதேனும் சாதக மான பதிலை அளிக்கும் என்ற எதிர் பார்ப்பு நிலவுகிறது. அத்தகைய சாதக மான பதிலை அளிப்பதா இல்லையா என்பதை இப்போது ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்' என ரணில் இதன் போது கூறினார்.

பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டால் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பது ஞானசார தேரரின் வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பொதுமன்னிப்பு வழங்குவது ஒரு பிரச்சினையாக இருக்கும் என்றே ஜனாதிபதி கூறுகிறார். பொதுமன்னிப்பு வழங்கப்படா விட்டாலும், இந்தப் பிரச்சினை இதைவிடப் பெரிய அள வில் வெடிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. இது மகாநாயக்க தேரர்களு க்கு இடையிலும் கருத்து வேறுபாடு களையும் பிரச்சினைகளையும் தோற்று விக்கும். அரசாங்கத்திற்கு மிகக் குறை ந்த கால அவகாசமே உள்ளது' என ரணில் எச்சரித்தார்.

இந்திய எதிர்ப்பு முயற்சி

எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய அனை த்துக் குழுக்களும் தற்போது ஐக்கிய மக்கள் சக்தி மீது அதிருப்தியில் உள்ளன. தற்போதைய சூழலில், சபா நாயகருக்கு எதிரான நம்பிக்கையில் லாப் பிரேரணையை எதிர்க்கட்சி பிரதான கலந்துரையாடல் பொருளாக மாறியுள்ளது. இருப்பினும், பொது மக்கள் மத்தியில் இந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை குறித்து எந்த வொரு ஆர்வமும் இல்லை. மாறாக, மகா சங்கத்தினரின் கௌரவத்தைப் பாதுகாத்து பௌத்த தர்மத்தைப் பேணிப் பாதுகாப்பது குறித்தே பொது ச்சமூகத்தில் பலத்த உரையாடலும் கவனமும் நிலவுகிறது. ஆனால், நாட்டின் உண்மையான இந்தப் பிரதான பிரச்சினையை அடியோடு மூடி மறைத்து விட்டு, சஜித் பிரேம தாசவின் குழுவினர் தொடர்பற்ற வேறு விடயங்களைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள் என வஜிர அபேவர்தன கூறினார்.

இந்த பரபரப்பான அரசியல் பின்னணி யில், அநுராதபுரம் புனித பூமியின் இரு ப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சமூகத்தில் பல்வேறு சந்தேகங்களும் அச்சங்களும் பரவி வருகின்றன. நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வரலாற்றுப் புனிதத் தலம் குறித்து எழும் வதந்திகள் பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், அரசாங்கம் இதுவரை இதற்கு எவ்வித தெளிவான பதிலும் வழங்காமல் மௌனம் காத்து வருவ தாக (22ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் கியூபாத் தூதுவர்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



யாழ்ப்பாணத்தில் கியூபத் தூதுவர்? இப்படி ஒரு செய்தியை பார்த்த போது ஏன் யாழ்ப்பாணத்தில் என்னும் கேள்வி தான் முதலில் எழுந்தது. ஒரு வேளை அனைத்து அரசியல் அதிசயங்களும் அரங்கேறும் இடம் யாழ்ப்பாணம் தானோ! ஓ-யாழ்ப்பாணமே என்று கவிதை எழுதியவரைத் தான் தேட வேண்டும்.



பல்வேறு நாட்டு தூதுவர்களும் வடக்கிற்கு வந்து செல்கின்றனர். குறிப்பாக மேற்குலக நாடுகளின் தூதுவர்கள். அவர்களுடன் மனித உரிமைகள், மாகாண சபைத் தேர்தல் மற்றும் வடக்கின் சமூக பொருளாதார அபிவிருத்தி என்று பல விடயங்களையும் பேச முடியும். அவ்வாறு பேசினால் அதில் ஒரு பொருளுண்டு.

ஏனெனில் அவர்கள் பல்வேறு வழிகளிலும் உதவி வருகின்றனர். அதற்கான பொருளாதார சக்தி அவர்களிடம் உண்டு. ஆனால் கியூபாவின் தூதுவரோடு என்ன பேச முடியும்? கியூபா என்ன நிலையில் இருக்கின்றது என்பது பற்றி அவரே, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஆங்கில இணையத் தளத்திற்கு விரிவான நேர்காணல் ஒன்றை வழங்கியிருக்கின்றார். அதற்கு மேல் நான் ஒன்றும் கூற வேண்டியதில்லை.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடையினால் பல தசாப்தங்களாக நெருக்கடிகளை எதிர் கொண்டு வரும் கியூபா, ஜனாதிபதி ட்ரம்பின் இரண்டாவது ஆட்சிக் காலத்தின் பொருளாதார தடைகளால், பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. வெனிசுலாவின் ஜனாதிபதி நிக்கலோஸ் மதுராவை, இராணுவ நடவடிக்கையின் ஊடாக அகற்றியதைத் தொடர்ந்து, வெனிசுலாவிலிருந்து கிடைத்து வந்த ஆதரவும் இல்லாமல் போய் விட்டது.

இந்த நிலையில் கியூப மக்கள் பஞ்சத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் இருக்கும் ஒரு நாட்டின் தூதுவரை அழைத்து, வடக்கின் அபிவிருத்தி பற்றி விவாதிக்கின்றனர் என்றால், ஒன்றில் அழைத்தவர்களின் அரசியல் அறிவு மட்டத்தை எண்ணி சிரிப்பதா அல்லது கலைப்படுவதா?

வடக்கிற்கு, புகையிரத்தில் சென்ற கியூபத் தூதுவர், அங்கு மூன்று நாட்கள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருக்கின்றார். அபிவிருத்தியடைந்த நாட்டின் துதுவர்கள் கூட இரண்டு நாட்களுக்கு மேல் வடக்கில் செலவழிப்பதில்லை. இலங்கையின் எந்தவொரு மாகாணத்திலும் கியூபத் தூதுவரை அழைத்து அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாடு பற்றி ஆராய்ந்ததாக நான் அறியவில்லை. கிடைக்கும் தகவல்களின்படி, தேசிய மக்கள் சக்தியோடு தொடர்புடையவர்கள் தான் இந்த ஏற்பாட்டை மேற்கொண்டிருப்பதாக அறிய முடிகின்றது. ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றிய தைத் தொடர்ந்து, தங்களை இடதுசாரிகள் என்று எண்ணிக் கொள்ளும் தமிழர்கள் சிலர், மீண்டும் தங்களுக்கு ஒரு செயற்பாட்டுத்தளம் கிடைத்திருப்பதாக நம்புகின்றனர் போல் தெரிகிறது. தேசிய மக்கள் சக்தியின் ஊடாக புரையோடிப் போயுள்ள பல பிரச்சினைகளை தீர்க்க முடியுமென்று அவர்கள் நம்புகின்றனர் போலும். அது அவர்களின் உரிமை.

இலங்கையின் இனத்துவ அரசியலில் இடதுசாரி வலதுசாரி என்னும் பாகுபாடு எப்போதும் இருந்ததில்லை. அவ்வாறு இருந்திருந்தால் இடதுசாரித்துவம் பேசிய தமிழ் இயக்கங்கள் தமிழீழம் கோரி போராடியிருக்க வேண்டியதில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ஈரோஸ் போன்ற பிரதான இயக்கங்களும் இன்னும் சிறியளவிலான குழுக்களும் தங்களை இடதுசாரிப் புரட்சியாளர்களாகவே அடையாளப்படுத்தியிருந்தனர். ஆனால் இறுதியில் இந்த புரட்சியாளர்கள் அனைவரும் இந்தியாவால் போசிக்கப்பட்டனர்.

இந்தியா இவர்களுக்கு பயிற்சியளித்தது. இடதுசாரிப் புரட்சியை முன்னெடுப்பதற்காக அல்ல மாறாக இலங்கையின் ஆட்சியாளர்கள் மீது ஆகக் கூடிய அழுத்தங்களை பிரயோகிப்பதற்கும் அதன் மூலம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்கும்தான். அத்துடன் அன்றைய புவிசார் அரசியல் நெருக்கடிகளும், அதனை கையாள வேண்டிய நிர்பந்தத்தில் இந்தியா இருந்ததுமே முதன்மையான காரணம்.

ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களை ஒரு இடதுசாரி அரசாங்கம் என்று எங்குமே அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. இதில் அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பதாகவே தெரிகிறது. யதார்த்தவாத அணுகுமுறையே அவர்களிடம் தெரிகிறது.

குறிப்பாக அமெரிக்காவுடன் நெருங்கிச் செயற்படவே அவர்கள் விரும்புகின்றனர். அமெரிக்காவின் கோபத்திற்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காகவே, ஈரானிய எண்ணைக் கப்பல்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் வழங்கும் விடயத்தை தவிர்த்தனர். இந்த நிலையில் கியூபாவுடன் நெருக்கமான பிணைப்பை காண்பித்துக் கொள்வது அவர்களுக்கு உவப்பானதல்ல. ஆனால் வடக்கில் கியூபத் தூதுவருடன் உரையாடுவதை ஒரு தமிழ் விவகாரமாகவே விட்டு விட்டனர் போன்றே தெரிகிறது.

மேலும் உத்தியோகபூர்வமாக கியூபத் தூதுவரை தேசிய மக்கள் சக்தி வடக்கிற்கு அழைக்கவில்லை ஆனால் தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர் முன்னரங்கில் காணப்பட்டார். அமைச்சர் சந்திரசேகரன் சந்தித்திருக்கின்றார். வடக்கிற்கும் இடதுசாரித்துவ அரசியலுக்கும் இடையில் ஒரு நீண்ட வரலாறுண்டு. வடக்கைச் சேர்ந்த தமிழரான நாகலிங்கம் சண்முகதாசன் இலங்கையின் (சீன சார்பு) கம்யூனீஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்திருக்கின்றார். சோவியத் - சீன தத்துவார்த்த பிளவு ஏற்பட்ட போது, சண்முகதாசன் சீன சார்பு நிலைப்பாட்டை எடுத்திருந்தார். தமிழர்கள் மத்தியில் தோற்றம் பெற்ற முதல் ஆயுதக் கிளர்ச்சி, யாழ்ப்பாண தமிழ் உயர் சாதியினருக்கு எதிராகவே இடம்பெற்றது. அதற்கு கம்யூனிஸ்ட் கட்சியினரே தலைமை தாங்கினர். ஆனால் தமிழரின் இனத்துவ அரசியலானது, ஒரு தேசிய விவகாரமாக உருமாறிய போது அதனை கோட்பாட்டு ரீதியில் சண்முகதாசன் ஆதரித்திருக்கவில்லை. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் இல்லை என்பதே அவருடைய நிலைப்பாடாக இருந்தது. சண்முகதாசன் தலைமையிலான சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கமாக இருந்தவரான றோகண விஜயவீர, அதிலிருந்து விலகிச் சென்றே, ஜே.வி.பியை ஆரம்பித்தார்.

தமிழ்த் தேசியவாதிகளை பொறுத்த வரையில், பாரம்பரிய தமிழ் இடதுசாரிகள் என்போர், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எதிரானவர்களாகவே புரிந்து கொள்ளப்பட்டனர். இந்தப் பின்புலத்தில்தான், ஜே.வி.பியையும், தமிழ்த் தேசியவாதிகள் என்போர் இப்போதும் பார்க்கின்றனர். ஆனால் தமிழரின் தேசியப் பிரச்சினையை தெற்கின் தாராளவாத கட்சிகளும் குறிப்பாக – மேற்குலக சார்பு கட்சியாக நோக்கப்பட்ட ஜக்கிய தேசியக் கட்சியும் நிராகரித்தே வந்திருக்கின்றது.

ஆனால் தமிழ்த் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கிய தமிழரசு கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி இரண்டுமே அடிப்படையிலேயே தென்னிலங்கையின் இடதுசாரித்துவ கட்சிகளுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதை தவிர்த்தே வந்திருக்கின்றனர். அரசியலுக்கும் அப்பால், யாழ்ப்பாண உயர் அடுக்கினரின் மேற்குலக சார்பின் ஊடாகவும் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

1957இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க அப்போதைய உலக அரசியல் சூழலை புரிந்து கொண்டு, அணி சாராக் கொள்கை என்னும் அடிப்படையில், கொழும்பு மற்றும் திருகோணமலையில் அமைந்திருந்த பிரித்தானிய படைத்தளங்களை அகற்றுமாறு கோரிய போது செல்வநாயகம் பிரித்தானிய படைத்தளங்களை அகற்றும் கோரிக்கையை எதிர்க்கிறார். இது அவருடைய பிரித்தானிய சார்புக்கு எடுத்துக்காட்டு. அதே வேளை, செல்வநாயகத்தின் உலக அரசியல் பற்றி புரிதலிலுள்ள வறுமைக்கும் இதனை ஒரு எடுத்துக் காட்டாக ஒருவர் முன்வைக்கவும் முடியும்.

தமிழ் தேசிய அரசியல், பிரதான அரசியலாக எழுச்சியுற்ற பின்னணியில், தமிழ் இடதுசாரிகளின் குரல்கள் கவனிப்பாரற்ற குரலாகச் சுருங்கி விட்டது. தமிழ் இயக்கங்களின் இடதூரித்துவ தலையீடுகள் என்பவை பெரும்பாலும் தேசியவாத அரசியலுக்கான சுலோகங்களாகவே இருந்தன. இதன் காரணமாகத் தான் தமிழர்கள் மத்தியில் இடதூரித்துவ அரசியல் வலுவடையவில்லை. மாறாக காணாமல் போனது.

இந்தப் பின்புலத்தில் நோக்கும் போது தான், கியூபத் தூதுவரின் யாழ்ப்பாண விஜயம் புருவத்தை உயர்த்தும் ஒரு நிகழ்வாகத் தெரிகிறது. அடிப்படையில் யாழ்ப்பாண மத்தியதர வர்க்கம் மேற்குலக தாகம் கொண்ட சமூகமாக வளர்சியுற்றியிருக்கின்றது. 1990களுக்கு பின்னர் ஏற்பட்ட மேற்குலக புலப்பெயர்வும், அதன் மூலமான கவர்சிகரமான பொருளாதார வாழ்வுடன் தான் இன்றைய யாழ்ப்பாண சமூகத்தை நோக்க வேண்டும். மேற்குல சார்பு என்பது, யாழ்ப்பாண சமூக பொருளாதார நலன்களோடு பின்னிப் பிணைந்து விட்டது. இடதுசாரித்தும் பேசும் யாழ் மத்தியதர வர்க்க நபரின் பிள்ளைகள் கூட, மேற்குல தலைகரம் ஒன்றில் தான் வசிக்கும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் இடதுசாரித்துவ அடிப்படையில் வடக்கில் ஒரு அரசியலை கட்டியெழுப்பலாம் என்று எண்ணுவது மிகவும் கடினமான காரியம் ஆனால் பாரம்பரிய தமிழ் கட்சிகள் மீதான அதிருப்தி, யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதினேழு ஆண்டுகளாக தமிழ்த் தேசியம் என்னும் பெயரில் இடம்பெற்று வரும் உள் முரண்பாடுகளும், சிதைவுகளும், மக்கள் மத்தியில் பெருமளவிற்கு அதிருப்தியையும் சலிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் தான், பெரும் பாண்மையான தமிழ் மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். இவ்வாறான தொரு பின்புலத்தில் தான், தேசிய மக்கள் சக்தியை சார்ந்து மாற்று அரசியல் உரையாடல்களை ஏற்படுத்தலாம் என்னும் எண்ணம் தமிழ் இடதுசாரிக் குழுக்களிடம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் அதற்கு சொந்த நாட்டையே எவ்வாறு நிமிர்த்துவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கும், கியூபாவை முன்வைத்து உரையாடுவது தான் வேடிக்கையாக இருக்கின்றது. கடந்த பதினேழு ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் பல வேடிக்கைகள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த வரிசையில், இப்போது இடதுசாரித்துவத்தின் பெயரால் இடம் பெறும் வேடிக்கையையும் சிறிது பார்ப்போம். எத்தனையோ பார்த்து விட்டோம் அல்லவா!

மருத்துவத் தவறுகளுக்கு விலை என்ன?

சில மாதங்களுக்கு முன்பு ஊடக நண்பர் ஒருவருடைய தாயார் இலங்கையின் வட பகுதியில் உள்ள மாவட்ட மருத்துவ மனை ஒன்றில் இறந்து விட்டார். சிகிச்சைக்காக அவரை அழைத்துச் சென்றபோது சாதாரணமாகவே கதைத் துப் பேசிச் சென்றவர், மருத்துவமனை யில் கூட எல்லோரோடும் இயல்பாகவே பேசியவர், திடீரென மரணமடைந்தது. பிள்ளைகளுக்குச் சந்தேகத்தை உண்டாக் கியது. எனவே 'இந்தச் சடுதியான மரண த்துக்கான காரணம் என்ன?' என்று அறிவதற்காக மருத்துவமனையிடம் கேள்வி எழுப்பினார்கள். அது கிருமித் தொற்றினால் ஏற்பட்டது என மருத்துவ மனை மிகச் சாதாரணமாகவே பதில் சொன்னது.

இந்தக் கிருமித் தொற்று ஏன் ஏற்பட் டது? எப்படி ஏற்பட்டது? இதற்குக் காரணம் என்ன? அதை ஏன் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ முடியவில்லை? இதற் கான பொறுப்பை யார் ஏற்பது? இந்த மரணத்துக்கான நியாயம் என்ன? அதை யார் சொல்வது? எதிர்காலத்தில் இப்படி ஒன்று நிகழாதிருப்பதற்கான உத்தரவாதம் என்ன? அதற்கான நடவடிக்கை எடுக்கப் படுமா? என்ற எந்தக் கேள்விக்கும் மருத்துவமனை பதில் அளிக்கவில்லை. அது பதில் அளிக்கப் போவதுமில்லை. ஏனென்றால் அது அரச மருத்துவமனை.

பொதுவாகவே அரச மருத்துவமனை களில் இந்த மாதிரியான அசமந்தமான போக்கு உண்டு என்பது பலருக்கும் அனுபவம். ஏனென்றால், அங்கே இலவச மாக மருத்துவ சேவை வழங்குவது அதாவது, அங்கே வரும் நோயாளிகளின் பரிதாபத்தைப் பார்த்து, புண்ணியத்துக் காகச் சேவையாற்றப்படுவது என்றே பெரும்பாலான மருத்துவர்களும் சில மருத்துமனை உத்தியோகத்தர்களும் கருதுகிறார்கள். ஆகவே, அங்கே வரு கின்ற மக்கள் (நோயாளிகள்) எந்தக் கேள்வியையும் கேட்காமல், வழங்கப்படு கின்ற சேவையைப் பெற்றுக் கொண்டு செல்ல வேண்டியது தான். எதிர்த்துப் பேசவோ, சந்தேகங்களைக் கேட்கவோ கூடாது. அப்படி ஏதாவது பேசினால், பேசுவதற்கு வாயைத்திறந்தால்...

பிறகு நீங்கள் வேறு இடத்தைப் பார்க்க வேண்டியது தான். அரச மருத்துவ மனைகளில் நோயாளிகளோடு ஏனோ தானோ என்று பேசும் சில மருத்துவர்கள், தனியார் மருத்துவனைகளில் மிகப் பவ்வியமாகப் பேசி, நலம் விசாரிப்பார்கள். இதுவும் பலருக்கும் நேரடி அனுபவம். அதெப்படி ஒரே ஆள் இரண்டு இடத்தி லும் இரண்டு விதமாகச் செயற்படுகிறார் சேவையாற்றுகிறார்?

ஆகவே இதைப்போன்ற மரணம் குறிப் பிட்ட மாவட்ட மருத்துவனையில் மட்டும் நடந்ததல்ல. பெரும்பாலான அரச மருத்துவமனைகளில் நடக்கும் சாதாரண விடயம். அல்லது பொதுவான நிலவரம்.

2013 தை மாதம் மாத்தறை வைத்திய சாலையில் சட்டபீட மாணவியின் வலது கை துண்டிக்கப் பட்டதிலிருந்து, 2023 இல் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிறுமியின் கைதுண்டாடப் பட்டமை, கிளிநொச்சி வைத்தியசாலை யில் முதல் பிரசவத்திற்கு சென்ற தாய், தனது சிசுவையும் இழந்து கருப்பையை யும் இழந்தமை, மன்னாரில் தாயும் சேயும் இறந்தமை, வவுனியாவில் பச்சிளம் குழந்தையின் மரணம், முல்லைத்தீவில் சிறுமி மரணம் எனப் பல மருத்துவத் தவறுகளைப் பட்டியலிட முடியும்.

இந்த விடயங்களையெல்லாம் இப்படி பொதுத் தளமொன்றில் எழுதியதற்காகவே மருத்துவர் சமூகமும் மருத்துவமனைச் சூழலும் மருத்துவ நிர்வாகத்தினரும் போர்முனையொன்றைத் திறக்கக் கூடும். இந்தக் கட்டுரைக்கு எதிராகப் போராட்டங் களையும் நடத்தலாம். ஆனால், என்ன தான் நடந்தாலும் சிலவற்றைப் பேசித் தானே ஆக வேண்டும். சீழ்ப் பிடித்தால் வெட்டி அகற்றவே வேண்டும். ஏனென் றால், இந்த மாதிரியான மரண விளை யாட்டுகள் தொடர்ச்சியாகப் பல இடங்களி லும் நடந்து, பாதகமான விளைவுகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொண்டேயிருக் கின்றன. கேட்கவும் பேசவும் ஆளில்லை என்றால், விளைவுகள் பாரதூரமானவை யாகவே ஆகி விடும். ஆகவே கொடுக்க வேண்டிய விலையைக் கொடுத்தேனும் சிலவற்றைப் பேச வேண்டும். சில கதவு களைத் திறந்தே தீர வேண்டும்.



மேலும் ஒரு ஆதாரமாக இன்னொரு சம்பவத்தையும் சொல்லலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் நண்பர் ஒருவர் சிகிச்சை பெற்று வந்தார். நாமும் சென்று அவரைச் சுகம் விசாரித்து விட்டு வந்தோம். இரண்டொரு நாளில் அவர் இறந்து விட்டார். காரணத்தைக் கேட் டால், கிருமித்தொற்று என்று சொன்னார் கள்.

மருத்துவ விசாரணையை நடத்தக் கோரலாமா என்று ஆலோசித்தோம். குடும்பத்தினர் விரும்பவில்லை. நடந்தது நடந்து விட்டது. உரியவர் இறந்து விட்டார். இனி விசாரணை, நீதிமன்றம் என்றெல்லாம் அலைவதால் என்னதான் பயன்? என்ற சலிப்பு அவர்களுக்கு. ஆனால் விசாரணையைக் கோரியிருக்க வேண்டும். அது எதிர்காலத்தில் பொறுப்பு டன் நடப்பதற்கான விழிப்புணர்வை உருவாக்கும்.

இதைப்போல பல சம்பவங்களை இங்கே சொல்ல முடியும். பெரும்பாலான மரண ங்கள் கிருமித் தொற்றுக் காரணமாக நடப்பதாகவே மிகச் சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. இறந்தவரின் உறவினர் கள் சில சந்தர்ப்பங்களில் கொந்தளித்து, மருத்துவமனை நிர்வாகத்துடன் உடனடியாக எதிர்வினையாற்றுகிறார்கள். அதற்குப் பின்னர், அதைப்பற்றி அவர்கள் பேசுவதில்லை. நோயாளி இறந்து விட்டார். இனி இதைப்பற்றிப் பேசுவதால் என்ன பயன்? என்று அவர்கள் கருது கிறார்கள். பலருக்கு அதற்கு அப்பால் என்ன செய்வது என்பதும் தெரியாது. அவர்களுக்கு உள்ள அடுத்த பிரச்சினை, இறந்தவருடைய உடலை மருத்துவ மனையிலிருந்து சச்சரவில்லாமல் வீட்டு க்கு எடுத்துச் சென்று இறுதிச் சடங்குகளைச் செய்வதே. இறுதி நிகழ்வுகளோடு அவர்களுடைய கோபமும் நியாயத்தைக் கேட்க வேண்டும் என்ற ஆவேசமும் தணிந்து விடுகிறது. ஆகவே ஆறிய கஞ்சி பழைய கஞ்சி என்ற கதையாகவே இவையெல்லாம் முடிந்து விடுகின்றன. மரணங்களோ தொடர்கதை. யாக நீள்கின்றன.

அப்படியென்றால் மரணச் சான்றிதழில் இந்த மரணங்களைப் பற்றி எப்படிக் குறிப்பிடுப்படுகிறது? 'என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

சுகவீனம் காரணமாக மரணம் என்று எழுதி முடித்து விடுகிறார்கள். இப்படி எழுதிய மரணச் சான்றிதழை குறித்த ஊடகவியலாளர் ஆட்சேபித்து, மருத்துவ அறிக்கையைத் தாம் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று தகவல் அறியும் சட்டமூலம் கோரியிருக்கிறார். சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளும் வகை யில் தாயாருடைய நோய் தொடர்பில் பேணப்பட்ட தலைமாட்டுச் சிட்டை (BHT), ஆய்வு கூட பரிசோதனை அறிக்கைகள், மருந்துச் சிட்டை, காய்ச்சல் சிட்டை போன்றவற்றின் உறுதிப்படுத்திய பிரதிகளை வழங்குமாறு கேட்கப்பட்டது.

மருத்துவ அறிக்கையை வெளியார் பார்ப்பதற்கு வழங்க முடியாது என்று மருத்துவமனை நிர்வாகம் சொன்னது. நண்பர் விடவில்லை. ஊடகத்துறையில் செயற்படுகின்றவர் என்பதால், தனக்குள்ள மேலதிக அறிவுடனும் துணிச்சலோடும் தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் தன்னுடைய கோரிக்கையை முன்வைத் தார்.

தகவல் அறியும் ஆணைக்குழு, மருத் துவமனையுடன் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டதோடு, குடும்ப உறுப் பினர்கள் கோரும் பட்சத்தில் மருத்துவ அறிக்கையை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தியும் உள்ளது. இந்த முன்னு தாரணத்தைக் கொண்டு, அதற்குப் பிறகு பல மருத்துவத் தவறுகளை விசாரிப்ப தற்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவும் வேறு சில தனி நபர் களும் முயற்சித்துள்ளனர்.

நடந்த மரணத்தைக் குறித்த ஆட்சேப னைகள் எதுவும் உறவினர்களால் தெரி விக்கப்படவில்லை என்றால், மருத்துவர் கள் எதை எழுதுகிறார்களோ, அதுதான் காரணமாகவும் உண்மையாகவும் இருக் கும். ஆட்சேபனைகள் எதையும் எவரேனும் தெரிவித்தால் தான், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த விசாரணைகளில் கண்டறியப்பட்ட காரணம் குறிப்பிடப்படும்.

அந்தக் காரணங்கள் பின்னர் சரி செய்யப் படுமா? மெய்யாகவே மருத்துவத் தவறு ஏதேனும் நடந்திருந்தால், அதற்கான இழப்பீடு வழங்கப்படுமா? நிவாரணம் அளிக்கப்படுமா? பொறுப்புரைத்தல் நடக்குமா? என்பதெல்லாம் மங்கலானவை.

ஆக மொத்தத்தில் அரச மருத்துமனை

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



யில் இப்படியும் அப்படியும் தான் சிகிச்சை நடக்கிறது. பல சந்தர்ப்பங்களிலும் அர்ப் பணிப்பான மருத்துவர்களும் தாதியர் களும் ஏனைய உத்தியோகத்தர்களும் சிறப்பான முறையில் சேவையாற்றுகிறார் கள். பல ஆயிரக் கணக்கானோர் அரச மருத்துவமனைகளில் தான் சிகிச்சை பெற்றுத் தேறுகிறார்கள். நான் எப்போதும் அரச மருத்துவமனையில் தான் சிகிச்சை களைப் பெற்றிருக்கிறேன். மருத்துவ மனை அனுபவங்களைக் கொண்டு, கவிதை நூலொன்றைக் கூட எழுதியிருக் கிறேன். மருத்துவர்களையும் தாதியர் களையும் ஏனைய பணியாளர்களையும் பாராட்டி ஊக்கப்படுத்தியுள்ளேன். அதே வேளை அதே அளவுக்கு அசிரத்தையும் உண்டு. சிகிச்சைக்காக விடுதியில் சேர்க்க ப்படும் நோயாளிக்கு கட்டில் கிடைப்பதி லிருந்து, அவருடைய நோய்த்தன்மை யைக் குறித்து அறிவது வரையில் சவாலாக இருப்பதும் பல இடங்களிலும் நடக்கிறது.

ஏனைய துறைகளை விட மருத்துவத் துறையை மக்கள் மதிப்பதற்குக் காரணம், உயிர்களை காக்கிறது, உடல் உறுப்புகளைப் பாதுகாக்கின்றது என்ப தாலேயே. ஆகவே தான் கடவுளுக்கு நிகராக மருத்துவர்களைச் சமூகம் பார்க்கிறது. ஆனால் சிலநேரங்களில் மருத்துவ அலட்சியம் அல்லது தவறான முடிவுகள், நிர்வாகம் சார்ந்தகுறைபாடுகள் (system failure) காரணமாக உயிரிழப்பு கள் அல்லது ஊனங்கள் நிகழ்கின்றன. இவை பாரதூரமானவை. வேறு துறை களில் நடக்கின்ற தவறுகள், பெரும் விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. மருத்துவத்துறையில் நிகழும் தவறுகள் ஆளையே காலியாக்கி விடக் கூடியது.

மருத்துவத் துறையில் நிகழும் தவறு களைக் கண்டறியும், கட்டுப்படுத்தும் நடைமுறை (கலாச்சாரம்) உலகளாவிய ரீதியில் கட்டி எழுப்பப்படுகிறது. இலங்கையிலும் அது கட்டி எழுப்பப்பட்டு வருகிறது. இதற்காக சுகாதாரப் பாது காப்பு மற்றும் மருத்துவத் தரத்தினைப் பேணுவதற்காகச் சுகாதார அமைச்சு ஒரு பிரிவினையே ஆரம்பித்துள்ளது. இதற் கென (நோயாளர் பாதுகாப்பு மற்றும் தரத்திற்கென — atient safety and quality) ஒருதனிப் பிரிவு, பணிப்பாளர், ஏனைய உத்தியோகத்தர்கள்,வாகனம், ஏனைய வளங்கள் என அனைத்தையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. அவர்களும் வெளிநாட்டுப் பயணங்களை மேற் கொண்டு இது தொடர்பான பயிற்சிகளில் பங்கேற்று, நடைமுறைகளை உருவாக்கு வதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால், நிலைமையில் பெரிதாக மாற்றமில்லை.

தவறுகள் தொடர்கின்றன. அதனால், அநாவசியச் சாவுகள் நிகழ்கின்றன. பதட்டத்தோடு தான் ஒவ்வொருவரும் மருத்துவமனையில் கால் வைக்க வேண்டியுள்ளது. கலக்கத்தோடு தான் மருத்துவமனைக் கட்டிலில் படுத்திருக்க வேண்டியிருக்கிறது. நோய்தேறி வீடு திரும்பினால், அது மெய்யாகவே வீடு பேறுதான்.

செம்மணி அறிக்கையும் தமிழ்ச் சமூகமும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -





எனது நண்பர் ஒருவர் சொன்னார். பேராசிரியர் ராஜ்.சோமதேவவின் தொல்லியல் ஆய்வுகள் தொடர்பான காணொளிகளை தான் பார்த்திருப்ப தாக. குறிப்பாக விக்னேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் அவர் தமிழர்களின் பூர்வீகம் தொன்மம் தொடர்பாக அவ் வப்போது அறிக்கைகள் விடுவார். அந்த அறிக்கைகளில் சிலவற்றிக்கு பேராசிரியர் பதிலளித்திருப்பதாக நண்பர் சொன்னார். ஆனால் அந்தப் பதில்கள் இனச் சாய்வுடையவை களாகவே தனக்குத் தோன்றின என்றும் அவர் சொன்னார்.

பேராசிரியர் சோமதேவ தொடரில் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான கருத்துக்கள் சந்தேகங்கள் முற்கற் பிதங்கள் உண்டு. அவ்வாறு ஏற்க னவே சர்ச்சைக்குரியவராக உள்ள ஒருவர் செம்மணி அகழ்வுப் பணி களில் ஈடுபடுத்தப்பட்ட போது அது தொடர்பாக ஆங்காங்கே முகநூல் சுவரில் சிலர் எழுதினார்கள்.

ஆனால் அந்தக் கருத்துக்கள் முகநூல் சுவரில் எழுதப்பட்டதற்கு மப்பால் ஓர் அரசியல் முடிவாக, ஓர் அரசியல் கருத்துருவாக்கமாகத் திரட்சியுறவில்லை. அதனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசியல் வாதிகளோ செயல்பாட்டாளர்களோ அல்லது குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்களோ அல்லது துறைசார் கல்விமான்களோ சோமதேவவின் நியமனத்தை அப்பொழுது கேள்வி க்கு உள்ளாக்கயிருந்தார்களா?

ஏன் அதிகம் போவான்? கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் ஆனை க்கோட்டை தொல்லியல் மையத்தில் சிறப்புத் தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மற்றும் பொதுமக்களு க்கான விழிப்புணர்வு மற்றும் காட்சி ப்படுத்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டன. இந்த நிகழ்வுகளை பல்கலைக்கழக வரலாற்றுத் துறை யுடன் இணைந்து ஒருங்கிணைத்த இணைத் தலைவர்களில் ஒருவர் பேராசிரியர் ராஜ் சோமதேவ. அப்படி யென்றால் சோமதேவ தொடர்பாக யாழ்.பல்கலைக்கழகத்தின் நிலைப் பாடு என்ன?

ஆனால் இப்பொழுது அவருடைய மூன்றாவது இடைக்கால அறிக்கை வெளிவந்த பின், அது தொடர்பாக விமர்சனங்கள் அலையாக மேல் எழுந்துள்ளன. நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் சோமதேவுக்கு எதிராகப் பேசியிருக்கிறார். தமிழரசுக் கட்சி பன்னாட்டு விசாரணைப் பொறி முறையை வலியுறுத்தியுள்ளது.

இப்பொழுது சோமதேவ மீது குற்றச் சாட்டுகளை முன் வைக்கும் தமிழ்த் தரப்பானது,110 நாட்களாக அவர் யாழ்ப்பாணத்தில் அகழ்வுப் பணி களில் ஈடுபட்டபோது, அதுவும் மூன்று கட்டங்களாக ஈடுபட்டபோது, ஆனைக்கோட்டை தொல்லியல் மையத்தில் நடந்த காட்சிப்படுத்தலில் இணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தபோது, அது தொடர்பாக ஏன் உரிய தரப்புகளிடம் தமது ஆட் சேபனையைத் தெரிவித்திருக்க வில்லை? குறிப்பாக ராஜதந்திரிகள், ஐநா மனித உரிமைகள் ஆணை யாளர், தூதரகங்களைச் சேர்ந்தவர் கள், பிற நாட்டு ஊடகவியலாளர்கள் போன்றோர் அந்த அகழ்வுப் பிரதேச த்துக்கு வந்து போயிருக்கிறார்கள். அப்பொழுது கூட பேராசிரியர் மீதான விமர்சனங்கள் அரசியல் அடர்த்தி யோடு முன்வைக்கப்பட்டனவா? இல்லை. அப்படிப்பட்ட செய்திகள் எவையும் அப்பொழுது கிடைக்க வில்லை.

அவருடைய முதல் இரண்டு அறிக்கைகள் வெளிவந்த போதும் அவ்வாறான ஆட்சேபனைகள் தெரி விக்கப்பட்டனவா? இல்லை. இப்பொழுது தான் மூன்றாவது இடைக்கால அறிக்கைக்கு தான் ஆட்சேபனைகள் கிளம்பியுள்ளன.

அப்படியென்றால் தமிழ்த் தரப்பு அவர் அகழ்வாராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்த 110 நாட்களிலும்,அவர் முதல் இரண்டு இடைக்கால அறிக்கைகளை வெளியிட்ட போதும் ஆனைக்கோட்டை தொல்லியல் மையத்தில் நடந்த காட்சிப்படுத்தலில் இணைத் தலைவராகச் செயற்பட்ட போதும், தெரிவிக்காத ஆட்சேப னையை, எதிர்ப்பை இப்பொழுது தெரிவிப்பதை எப்படி விளங்கிக் கொள்வது?

முதல் இரண்டு இடைக்கால அறிக்கைகளிலும் தமிழ்மக்களின் நீதிக்கான போராட்டத்திற்குப் பாதக மான அம்சங்கள் இருக்கவில்லை. கடைசியாக வந்திருக்கும் இடைக் கால அறிக்கை பாதகமான அம்சங் களை கொண்டிருக்கிறது. அதன் பொருள் கடைசியாக வந்த அறிக்கையில் தான் பேராசிரியர் தன் நிலைப்பாட்டை மாற்றினார் என்பதா? கடைசியாக வந்த அறிக்கையோடு தான் அவர் யார் என்பது தெரிய வந்ததா? இதற்கு முன்னுக்குத் தெரி யாதா? இந்தவிடயத்தில் அதாவது, செம்மணி அகழ்வுப் பணிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகச் சம்பந்தப்பட்ட சட்டச் செயற்பாட்டு அமைப்பு உட்பட, தமிழ் அரசியல் வாதி கள்,செயற்பாட்டாளர்கள்,சிவில் சமூகங்கள் போன்றன ஏன் முன் கூட்டியே உஷாராக இருக்க வில்லை?

ஏனென்றால் தமிழ் மக்கள் சம்பந்தப் பட்ட விடயங்களில் தொடர்ச்சியும் இல்லை. ஒருங்கிணைப்பும் இல்லை. அவ்வப ்போது எதிர்த்தரப்பின் அல்லது வெளித் தரப்புகளின் நடவடிக்கைகளுக்கு பதில்வினை யாற்றும் ரியாக்ட்டிவ் அரசியல் தான் தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது உண்டு. ப்ரோ ஆக்டிவாக தனது செயல்களின் மூலம் ஏனைய தரப்பு களை தன்னை நோக்கி வரவழை க்கும் அரசியல் செய்முறை தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

அவ்வாறு ப்ரோ ஆக்டிவாக சிந்தித்து இருந்திருந்தால், அகழ்வுப் பணிகள் தொடர்பான தொல்லியல் மற்றும் மருத்துவத் துறைசார் தமிழ்ப் புலமையாளர்களை அழை த்து அது தொடர்பாக ஏற்கனவே விவாதங்களை நடத்தியிருந்திரு ந்தால், பேராசிரியர் சோமதேவ தொடர் பாக முன்கூட்டியே ஆட்சேபனை யைத் தெரிவித்திருந்திருக்கலாம். ஆனால் அப்படி எதுவும் நடக்க வில்லை. ஏன் நடக்கவில்லை என் றால் அவ்வாறு ப்ரோ ஆக்டிவாகச் செயற்பட அல்லது அதனை அரசி யல் வார்த்தைகளில் சொன்னால், ஒரு தேசமாகச் சிந்தித்துச் செயற்பட அல்லது அதை இன்னும் கூர்மை யான வார்த்தைகளில் சொன்னால், ஓர் அரசைப் போல சிந்தித்துச் செயற்பட யாரும் இல்லை.

ஆனால் அரசு அதன் உபகரணங் களின் ஊடாக விடயங்களை முன்னெடுக்கின்றது. செம்மணி அகழ்வுப் பணிகளும் அப்படித்தான். அரசு அதன் அரச கட்டமைப்பு களுக்கு ஊடாக அந்த அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின் றது. அந்த அகழ்வுப் பணிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக மனித உரிமைகளுக்கும் அபிவிரு த்திக்குமான மையம் (CHRD) என்ற சட்டச் செயற்பாட்டு அமைப்பின் பிரசன்னம் உண்டு. ஆனால் தமிழ்த் தரப்பு அது தொடர்பாக ஆழமாக தொடர்ச்சியாக அவதானிக்கத்தக்க, தொகுக்கப்பட்ட முடிவுகளை எடுக் கத் தேவையான மையக் கட்ட மைப்புகளைக் கொண்டிருக்கிறதா? இதை மேலும் ஆழமாக,கூர்மை யாகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

ஒருவரும் பொறுப்பில்லை.யாராலும் பொறுப்பேற்கப்படாத ஒரு மக்கள் கூட்டமாக தமிழ்மக்கள் காணப்படு கிறார்கள். உள்ளதில் பெரிய கட்சி யாகிய தமிழரசுக் கட்சி தானே தீர்மானிக்கும் கட்சி என்று கூறு கிறது. புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்பு கள் சில தாயகத்தின் நிலைமைகளை தொலைவில் இருந்து இயக்கி அதன் மூலம் தாமே தீர்மானிக்கும் சக்தி களாக வரலாம் என்று நம்புகின்றன. ஆனால் கடந்த 17 ஆண்டுகளாக அவர்களால் அவ்வாறு வர முடிய வில்லை. இதனால் தமிழ்மக்கள் யாராலும் பொறுப்பேற்கப்படாத மக்களாகக் காணப்படுகிறார்கள். தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்படும் சறுக்கல்களுக்கும் தோல்விகளுக்கும் யாரும் பொறுப்புக் கூறுவதில்லை.

அதன் விளைவாகத் தான் தமிழ்த் தேசியப் பரப்புப்பில் ஆங்காங்கே நடந்து வரும் போராட்டங்கள் ஒரு மையத்திலிருந்து இணைக்கப் படாதவைகளாகக் காணப்படுகின்றன. மயிலத்தமடு, மாதவனை மேச்சல் தரைக்கான போராட்டத்தில் கட்சி களும் சிவில் சமூகங்களும் ஒப்பீட்ட ளவில் ஒருங்கிணைந்து செயல்படு கின்றன.

தையிட்டிப் போராட்டத்தை தமிழ்த் தேசியப் பேரவைதான் பெருமளவுக்கு முன்னெடுக்கின்றது. எல்லாக் கட்சி களும் இணையும் போது அந்தப் போராட்டம் பெருக்கின்றது.

நாட்டில் இப்பொழுது மூன்று சட்ட முன்மொழிவுகள் மேசையில் உண்டு. முதலாவது புதுப்பிக்கப்பட்ட பயங் கரவாதத் தடைச் சட்டமூலம். இரண்டாவது, ஒருங்கிணைந்த குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான சட்டமூலம். மூன்றாவது, அரச சார்பற்ற நிறுவனங்களைப் பதிவதற் கான சட்டமூலம். இம்மூன்று சட்ட மூலங்கள் தொடர்பாகவும் தமிழ்த் தரப்பு ஒரே குரலில் தன் எதிர்ப்பை முன்வைக்க வேண்டிய தேவை உள்ளது.

இப்படியாக தமிழ்த் தேசிய அரசிய லில் ஒரு தேசமாக தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடிய, அல்லது இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன் னால், ஒரு தேசமாக தமிழ் மக்கள் இருப்பதை அழிக்கும் உள்நோக்க த்தை கொண்ட எல்லா அரசு நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கி றார்கள். அதை ஒரு தேசமாக ஒன்றிணைந்து செய்ய வேண்டியவர் களாக இருக்கிறார்கள்.

ஆனால் இதில் உள்ள துயரம் என்னவென்றால்,தமிழ் மக்களை ஒரு தேசமாக இருக்க விடக்கூடாது என்று திட்டமிட்டு முன்னெடுக்கப் படும் நடவடிக்கைகள் சிங்கள பௌத்த அரசு என்ற கட்டமைப்புக் கூடடாக முன்னெடுக்கப்படுகின்றன. அதேசமயம் தமிழ் மக்களோ தம்மை ஒரு தேசமாகத் தற்காத்துக் கொள்வ தற்கான நடவடிக்கைகளை கட்ட மைப்பு ரீதியாக முன்னெடுக்க முடி யாதவர்களாகக் காணப்படுகிறார்கள் என்பது தான்.

தமிழ் மக்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனை இல்லை. மு.திரு நாவுக்கரசு கூறுவது போல இன அழிப்பு என்பது ஒரு கட்டமைப்பு சார்ந்த நடவடிக்கை தான். அவர்

(18ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானை நெருங்க விடுமா இந்தியா?

பாகிஸ்தானின் பாதுகாப்பு செயலாளர் லெப். ஜெனரல் முஹமட் அலி, அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் கூர்ந்து நோக்கப்படும் ஒன்றாக உள்ளது. அவரது பயணத்தின் அடிப்படை நோக்கம் ஆறாவது இந்தியா -பாகிஸ்தான் ஆயுதப்படைகள் கலந்துரையாடலில் பங்கேற்பது தான்.

ஜீலை மூன்றாம் திகதி கடற்படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற அந்த பாதுகாப்பு கலந்துரையாடலுக்கு, இலங்கை மற்றும் பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலாளர்கள் கூட்டாக தலைமை தாங்கியிருந்தனர். இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து அதனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்த பாதுகாப்பு உரையாடலுக்கு பின்னர், பாகிஸ்தானின் பாதுகாப்புச் செயலாளர் லெப். ஜெனரல் முஹமட் அலி, பாதுகாப்புச் செயலாளர் எயார் மார்ஷல் சம்பத் துய்யகொந்த மற்றும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர ஆகியோரை சந்திப்பதுடன் மாத்திரம் நின்று விடவில்லை.

அதற்கு அப்பால், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அமைச்சர் அநுர கருணாதிலகவையும் சந்தித்து பேசியிருக்கிறார்.



இரண்டு நாடுகளுக்கும் இடையில் விமான மற்றும் கப்பல் போக்குவரத்து துறைகளில் கூட்டாண்மை செயற்பாடுகளை வலுப்படுத்துவது மற்றும் முன்னெடுத்துச் செல்வது குறித்து ஆராய்வதற்காக இந்த சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது. இலங்கையுடன் பாகிஸ்தான் நீண்ட கால நட்புறவை கொண்டிருக்கிறது.

அதன் எல்லா ஒத்துழைப்புக்கள் மற்றும் செயற்பாடுகளும், இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளுக்கு உதவும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது, பாகிஸ்தானின் இராணுவப் பயிற்சி, ஆயுத உதவிகள் மற்றும் ஏனைய இராணுவ ரீதியான ஒத்துழைப்புகள், இலங்கை இராணுவத்தின் பல்வேறு வெற்றிகளுக்கு முக்கிய பங்களித்திருக்கிறது. பல இக்கட்டான தருணங்களில், இலங்கை இராணுவம் தோல்விகளை தவிர்க்கவும் பாகிஸ்தான் உதவியிருக்கிறது. குறிப்பாக, இரண்டு முக்கியமான சந்தர்ப்பங்கள் தவிர்க்க முடியாதவை.

2000ஆம் ஆண்டு ஆனையிறவு தளத்தைக் கைப்பற்றிய பின்னர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான போரை விடுதலைப் புலிகள் ஆரம்பித்திருந்தனர்.

கேரதீவில் தரையிறங்கிய புலிகள், தனங்களப்பு, நாவற்குழி, கைதடி, சாவகச்சேரியை கைப்பற்றினர்.

கிழக்கு அரியாலையில் தரையிறங்கிய புலிகள், செம்மணி, அரியாலை, கொழும்புத்துறை பகுதிளைக் கைப்பற்றி, யாழ்ப்பாணம் கச்சேரியை அண்டிய பகுதிகள் வரை முன்னேறியிருந்தனர்.

அந்த தருணத்தில், பாகிஸ்தானில் இருந்து அவசரமாக பலாலியில் கொண்டு வந்து இறக்கப்பட்ட பல் குழல் பீரங்கிகள் தான் விடுதலைப் புலிகளின் முன்னகர்வைத் தடுத்து நிறுத்தின. அது போல 2008ஆம் ஆண்டு இறுதிக் கட்ட போரின் போதும் மாங்குளத்தை கைப்பற்றும் தருணத்தில் இராணுவத்தின் மோட்டார் மற்றும் ஆட்டிலறி பீரங்கிக் குண்டுகளின் கையிருப்புகள் தீர்ந்து போகும் நிலை ஏற்பட்டது.

அதனால், குறிப்பிட்டளவு காலத்திற்கு போரை நிறுத்தி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. அந்த தருணத்தில், இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தனிப்பட்ட முறையில் பாகிஸ்தான் இராணுவ தளபதியுடன் தொடர்பு கொண்டு, பாகிஸ்தான் இராணுவத்தின் ஆயுத கிடங்கில் இருந்து பெருமளவிலான பீரங்கி குண்டுகளை பெற்றுக் கொண்டு போரை முன்னெடுத்திருந்தார்.

இவ்வாறாக, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு பாகிஸ்தான் அளித்த பங்களிப்பு மிக மிக அதிகம். அதற்கான நன்றி கடனாகவே, இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானுடனான நட்புறவை எந்தக் காலத்திலும் கைவிட தயாராக இருந்ததில்லை.

பாகிஸ்தானுடனான நட்பை விட்டுக் கொடுக்காத வகையிலேலேயே இந்தியாவுடன் நட்புறவை இலங்கை பேணி வந்திருக்கிறது. இதனை இந்தியாவும் புரிந்து கொண்டிருந்தது.

இவ்வாறான சூழலில், பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலாளரின் அண்மைய இலங்கைப் பயணத்தின் போது, துறை முகங்களை பயன்படுத்துவது மற்றும் விமானப் போக்குவரத்து மற்றும் துறைமுகத் துறைகளில் தொழில்நுட்பப் பரிமாற்றங்கள், திறன் மேம்பாடு மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் இந்த ஒத்துழைப்புகள், இந்தியாவின் கவனத்தை ஈர்க்காமல் இருக்க முடியாது.

ஏனென்றால், இந்தியப் பெருங்கடலில் இலங்கையைத் தனது உடனடி செல்வாக்கு வலயத்தின் ஒரு பகுதியாக இந்தியா கருதுகிறது.

இதனைத் தக்க வைப்பதற்காக, பொருளாதார முதலீடுகள், உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் இராஜதந்திர அழுத்தங்கள் ஆகியவற்றின் மூலம், வெளி சக்திகளை, குறிப்பாக சீனாவை, தீவிரமாக எதிர்கொள்ள முயன்று வருகிறது.

திருகோணமலையில் உள்ள சம்பூரில் மின் உற்பத்தி நிலையம், எண்ணெய் சேமிப்புக் களஞ்சியம் போன்ற திட்டங்களை இலங்கையுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு இந்தியா திட்டமிட்டுள்ள போதும், இந்த திட்டங்களை தொடருவதில் நீண்ட தாமதங்கள் காணப்படுகின்றன. அதேபோல, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் அபிவிருத்தி, எரிசக்தித் திட்டங்கள் போன்றவற்றிலும் இங்கு இந்தியா போட்டியிட்டு வருகிறது.

இந்தியாவின் இந்த அணுகுமுறை பெரும்பாலும் பொருளாதார நலன்களையும், பாதுகாப்பு நலன்களையும் இணைப்பதாகவே அமைந்திருக்கிறது. ஆனால், கொழும்பில் பாகிஸ்தானுடனான ஒத்துழைப்புகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் திட்டங்கள் நெகிழ்வுத்தன்மை குறைவானவையாக இருப்பதாக அல்லது நிபந்தனைக்குட்பட்டதாக இருப்பதாக இலங்கை அரசாங்கத்தினால் உணரப்படுகிறது.

இந்தியப் பெருங்கடலில் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஆசியாவை இணைக்கும் முக்கிய கடல் வழிப் பாதையில் அமைந்துள்ள இலங்கை, ஒரு முக்கியமான புவிசார் மூலோபாய இடத்தில் அமைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் பாகிஸ்தான் -இலங்கை உறவுகள் மேலும் ஆழமடைவது, இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய செல்வாக்கிற்கு நேரடியான சவால்களை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இலங்கையில், பாகிஸ்தான் மற்றும் சீனாவின் அதிகரித்த ஈடுபாடு, இலங்கையின் தொடர்புகளை இந்தியாவிலிருந்து விலக்கி பல்முனைப்படுத்தக் கூடும் என்ற அச்சம் புதுடெல்லியிடம் இருக்கிறது.

இதனால், இந்தியக் கடல் எல்லைகளுக்கு அருகில் மூன்றாம் தரப்பினரின் செல்வாக்கை அதிகரிக்கக் கூடும், பிராந்திய இணைப்புத் திட்டங்களை வடிவமைக்கும் இந்தியாவின் திறனைப் பாதிக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை சீனாவுடனான பரந்துபட்ட போட்டிக்கு மத்தியில், பாகிஸ்தான் தொடர்பான பாதுகாப்புச் சூழல்களை நிர்வகித்துக் கொண்டு இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் தனது நலன்களைப் பாதுகாப்பதற்கு, கொழும்பின் மூலோபாய உள்கட்டமைப்பின் மீது வலுவான செல்வாக்கைப் பேணுவது அவசியம் எனக் கருதுகிறது.

இவ்வாறான நிலையில், தெற்காசியா மற்றும் இந்தியப் பெருங்கடலில் நடைபெறும் பரந்த புவிசார் அரசியல் போட்டியின் ஒரு பகுதியாக, கொழும்புக்கும் இஸ்லாமாபாத்துக்கும் இடையிலான குறைந்தபட்ச ஒத்துழைப்புகள் கூட, இந்தியாவில் உன்னிப்பாகக் கவனிக்கப்படும் நிலை காணப்படுகிறது.

இந்தச் சூழலில் பாகிஸ்தானுடனான ஒத்துழைப்புகள், குறித்த எந்தவொரு நகர்வும் சிக்கலான சூழ்நிலைகளையே ஏற்படுத்தும். அண்மையில் பாகிஸ்தானின் நீர்மூழ்கி கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்துச் சென்ற விவகாரம் கூட, இந்தியாவினால் சகித்துக் கொள்ளக் கூடிய ஒன்றாக இருந்திருக்கவில்லை.

சீன நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்தில் தரித்துச் செல்வதை தடுத்த இந்தியாவினால், சீனாவில் தயாரிக்கப்பட்ட பாகிஸ்தான் நீர்மூழ்கி கொழும்பில் தரித்துச் செல்வதை தடுக்க முடியவில்லை. இவ்வாறான நிலையில், வங்கடலில் பாகிஸ்தானும் நீர்மூழ்கி கப்பலை நிறுத்துவதற்கு தயாராகி வருகிறது. இதுஇந்தியாவுக்கு நேரடியாக சவால் விடுகின்ற ஒரு செயற்பாடாக இருக்கும்.


ஏனென்றால், வங்கக்கடல் தற்போதைய நிலையில் பாகிஸ்தானின் இறையாண்மையுடன் எந்தவகை யிலும் தொடர்புடைய ஒன்று அல்ல. 1971 போருக்கு முன்னர் வங்க கடலில் பாகிஸ்தானுக்கு இறையாண்மை உரிமை இருந்தது. இப்போது பங்களாதேஷாக இருக்கின்ற பகுதி அப்போது, கிழக்கு பாகிஸ்தானாக இருந்தது. இருந்தது ஆனால் இப்போது அவ்வாறான நிலை இல்லை.

இந்த சூழலில் வங்கக் கடலுக்குள் தனது நீர்மூழ்கியை நிலை நிறுத்துகின்ற பாகிஸ்தானின் திட்டம் இந்தியாவை நோக்கி விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகிறது. இவ்வாறான நீர்மூழ்கிகளின் இருப்பிற்கு, இலங்கையை ஒரு தளமாகவோ அல்லது விநியோக மையமாகவோ பயன்படுத்த பாகிஸ்தான் முற்படுமானால் அது இந்தியாவுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தும்.

இவ்வாறான நிலையில், இலங்கையுடன் பரந்துபட்ட அளவில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தி வரும் பாகிஸ்தான், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் (18ம் பக்கம் பார்க்க)

தவிர்க்க முடியாத நெருக்கடிக்குள் இலங்கைத்தீவு!

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஒரு பக்கத்தில் மத்திய கிழக்கு பதற்றத்தின் விளைவுகளையும் இன்னொரு பக்கத்தில் பூகோள மற்றும் பிராந்திய அரசியல் பதற்றத்தின் விளைவுகளையும் தாங்கிக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்குள் இலங்கைத் தீவு சிக்கிப் போயிருக்கிறது.

மத்திய கிழக்கில் ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் தொடங்கிய போர் தணிந்து விட்டாலும் அதன் தாக்கங்கள் இன்னமும் இலங்கையை பாதித்துக் கொண்டு தான் இருக்கிறது.

இந்தப் போரின் தொடக்கத்தில், காலிக்கு அண்மையாக – இலங்கையின் கடல் எல்லைக்கு சற்று வெளியே, ஈரானிய போர்க்கப்பலான ஐ.ஆர்.ஐ. எஸ். டேனா அமெரிக்க நீர்மூழ்கி கப்பலின் டோர்பிடோ தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டது.

அந்தச் சம்பவத்திற்குப் பின்னர், ஈரானிய கடற்படை மாலுமிகளையும், சடலங்களையும் மீட்பதற்கு, நடவடிக்கை எடுத்திருந்த இலங்கை, மீட்கப்பட்ட சடலங்கள், மற்றும் மாலுமிகளை ஈரானிடம் ஒப்படைத்திருந்தது.

அமெரிக்காவும் ஈரானும் நேரடியாக மோதிக் கொண்டிருந்த சூழலில், இந்த ஒப்படைப்புகள் இடம்பெற்றன. கைப்பற்றிய ஈரானிய மாலுமிகளை தங்களிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கையை இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை.

அதேவேளை ஈரானிய கடற்படையின் விநியோகக் கப்பல் ஒன்று, திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு இன்னமும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

ஈரானிய மாலுமிகளுக்கு இலங்கை அரசாங்கம் உதவியது அமெரிக்காவுக்கு பிடிக்காத போதும், அதனை தடுக்கவோ இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுக்கவோ முடியவில்லை. காரணம், அது சர்வதேச கடல் சட்டங்கள் மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு உட்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருந்தது.

அதற்குப் பின்னர் ஈரானின் எண்ணெய் விநியோகத்தை முடக்கும் வகையில் அதன் எண்ணெய்க் கப்பல்களுக்கு அமெரிக்கா தடைகளை விதித்தது. அமெரிக்காவின் பொருளாதார தடைகளை மீறி ஈரான் தனது சொந்தக் கப்பல்களின் மூலம், சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு எண்ணெயை விற்பனை செய்து வந்தது.

அந்தக் கப்பல்களில் பல இப்போது இந்தியப் பெருங்கடலில் நிர்க்கதியாக நிற்கின்றன. அவற்றில் 20 வரையான கப்பல்கள் இலங்கையை அண்மித்த பகுதிகளில் பல வாரங்களாக நங்கூரமிட்டுள்ளன. அவ்வப்போது அவை சற்றுத் தூரம் நகர்ந்து சென்றாலும், பெரும்பாலான கப்பல்கள் இன்னமும் இலங்கையின் மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்பை அண்டியே நிலை கொண்டிருக்கின்றன.

அவை அமெரிக்காவினால் தடை செய்யப்பட்டவையாக இருப்பதால், கொழும்பு துறைமுகத்திற்கு வர முடியாது. அவற்றுக்கான விநியோகங்களைப் பெற முடியாத நிலை காணப்படுகிறது.

இந்தக் கப்பல்கள் இலங்கையை அண்டிய கடற்பகுதியில் நங்கூரமிடத் தொடங்கிய போதே, இவற்றுக்கு விநியோகங்களை வழங்குவது தடைகளை மீறிய செயலாக கருதப்படும் என்றும், சர்வதேச தடைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றும், அமெரிக்கத் தரப்பில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனாலும், உள்ளூர் நிறுவனங்கள் மூலமாக, ஈரானிய கப்பல்களுக்கு



விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாக சில தகவல்கள் கசிந்த நிலையில், அமெரிக்கத் தரப்பில் மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் அரசாங்கம் தாம் எந்த விநியோகங்களையும் மேற்கொள்ளவில்லை என்று, அமெரிக்காவுக்கு உறுதி அளித்திருந்தது. அத்துடன், கடற்படையின் கண்காணிப்பை அதிகரித்திருப்பதாகவும் கூறியது.

இலங்கையும் ஈரானும் பாரம்பரியமான நட்பு நாடுகள்.மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் போரை நடத்திக் கொண்டிருந்த போது டொலர் பற்றாக்குறையால் எரிபொருளை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கைக்கு ஈரான், எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக பெருமளவு கடனை வழங்கியது.

அந்தக் கடன் வழங்கப்பட்டிருக்காது போனால், போர் நிறுத்தப்பட வேண்டிய நிலை கூட ஏற்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட நிலையில் இருந்த உறவுகளுக்கு அமெரிக்க – ஈரான் முரண்பாடுகள், சவாலாக மாறியுள்ளது. இலங்கைக்கு அண்மையில் தரித்து நிற்கும் ஈரானிய கப்பல்களை வெளியேறுமாறு கேட்க முடியாத நிலை இலங்கைக்கு உள்ளது.

அவை இலங்கையின் கடல் எல்லைக்குள் இல்லை என்பது ஒரு காரணம். ஈரானுடன் உள்ள பாரம்பரிய உறவுகள் இன்னொரு காரணம். அதேவேளை, இலங்கையை அண்டிய பகுதியில் அவை தரித்திருப்பது, இந்த முரண்பாடுகளின் ஓர் அங்கமாக இலங்கையை மாற்றியிருக்கிறது. தேவையின்றி அமெரிக்க – ஈரான் மோதல்களுக்குள் இலங்கை இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கப்பல்கள் இலங்கைக்கு அருகே உள்ள நிலையில், அவற்றுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் அனைத்துக்கும் இலங்கையே பொறுப்பேற்க வேண்டியிருக்கும். இப்போது போர் இல்லாத சூழலில், அந்தக் கப்பல்கள் தாக்கப்படும் ஆபத்துகள் இல்லை. ஆனால், அது நிரந்தரமானதெனக் கருத முடியாது.

அதேவேளை ஈரானிய எண்ணெய் தாங்கி கப்பல்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்படுவது, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். இந்த ஈரானியக் கப்பல்கள் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் இருப்பதால், இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை தங்களின் ரோந்துக் கப்பல்கள் மற்றும் உளவு விமானங்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியுள்ளது.

அமெரிக்காவின் இரண்டாம் நிலை பொருளாதாரத் தடைகளுக்கு அஞ்சி, இந்தக் கப்பல்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் அல்லது எரிபொருளை விநியோகிக்க இலங்கைத் துறைமுக அதிகாரிகளும் உள்ளூர் முகவர்களும் மறுத்துள்ளனர். சர்வதேச கடற்பரப்பில், வணிக கப்பல்களை பல மாதங்கள் மட்டுமன்றி ஆண்டுக்கணக்கில் கூட ஒரே இடத்தில் நகராமல் நிறுத்தி வைக்கலாம்.

ஆனால், கப்பலின் கையிருப்பு தீரும் வரை மட்டுமே ஈரானிய மாலுமிகளால் அங்கு தங்கியிருக்க முடியும். சூழ் நிலைகளைப் பொறுத்து கப்பல்களை ஒரே இடத்தில் நிறுத்தி வைப்பதற்கு இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன.

ஒன்று, சூடான நிறுத்தம் (Hot Lay-up) எனப்படும். இதன்படி, கப்பல்கள் 6 மாதங்கள் வரை நிறுத்தப்படும். ஆனால் கப்பலின் இயந்திரம் மற்றும் முக்கிய அமைப்புகள் தொடர்ந்து இயங்கும். இதன் மூலம், கப்பலை சில நாட்களிலேயே மீண்டும் பயணத்திற்கு தயார் செய்து விடலாம்.

இன்னொன்று, குளிர்ந்த நிறுத்தம் (Cold Lay-up) எனப்படும். இதன்படி, கப்பல்கள் பல மாதங்கள் முதல் பல ஆண்டுகள் வரை ஒரே இடத்தில் நிறுத்தப்படும். செலவைக் குறைப்பதற்காக இயந்திரங்கள் முழுமையாக நிறுத்தப்பட்டு, மிகக் குறைந்த மாலுமிகள் மட்டும் பாதுகாப்பிற்காக இருப்பார்கள்.

அதேவேளை, கப்பல்கள் ஒரே இடத்தில் பல வாரங்கள் நகராமல் நின்றால், அதன் அடிப்பகுதியில் பாசிகள், சிப்பிகள் போன்ற கடல் வாழ் உயிரினங்கள் ஒட்டிக்கொள்ளும். இதனால் கப்பலின் வேகம் குறைவது டன், இயந்திரமும் சேதமடையும்.

அதை விட கடல் சீற்றம், புயல் போன்ற இயற்கை பேரிடர்களின் போது ஒரே இடத்தில் நிற்கும் கப்பல்கள் ஆபத்தில் சிக்கும் வாய்ப்புகளும் அதிகம். அதைவிட, நங்கூரம் நழுவினால் பிற கப்பல்களுடன் மோதும் அபாயமும் உள்ளது.

கப்பலில் இருக்கும் மாலுமிகளுக்குத் தேவையான உணவு, குடிநீர் மற்றும் எரிபொருள் இருப்பு இருக்கும் வரை மட்டுமே, ஒரு கப்பல் கடலில் நிற்க முடியும்.

அதன் பின்னர், கப்பலில் உள்ள மாலுமிகள் வெளியேற நேரிடும். அப்போது கப்பல் கைவிடப்படலாம். ஒரு கப்பல் கைவிடப்படுவது பிரச்சினையல்ல.

பல கப்பல்கள் கைவிடப்படும் போது, அவை மூழ்கினாலோ வேறு பிரச்சினைகளில் சிக்கினாலோ, அதனைக் கண்காணிக்க, மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கைக்குரிய பொறுப்பாக இருக்கும்.

இதனால் இலங்கையின் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்புகள் ஏற்படும். கடல் மாசு அடையும்.

இப்படிப் பல பிரச்சினைகளை வரும் மாதங்களில் இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். இந்தச் சூழலில், கடந்த 24ஆம் திகதி ஆழ் கடலில் தரித்து நின்ற ஈரானிய கப்பல்களில் இருந்த 40 மாலுமிகள் இலங்கை கடற்படையின் இரண்டு படகுகளில் ஏற்றி வரப்பட்டு, கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், மறுநாள் தெஹ்ரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான செலவினங்கள் ஈரானிய தூதரகத்தினால் பொறுப்பேற்கப்பட்டதாகவும், இது முற்றிலும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்றும் அரசாங்கம் கூறியிருந்தது.

ஏற்கனவே இது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருந்த நிலையில், மீண்டும் ஒரு சவாலான நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறது. அமெரிக்காவின் தடைகளை மீறுவதற்கே ஈரான் முற்படுகிறது.

ஈரானிய கப்பல்களை முடக்குவதற்கே அமெரிக்கா முற்படுகிறது. இந்த இரண்டு தரப்புகளையும் சமாளித்துக் கொண்டு, இந்த விவகாரங்களை கையாள வேண்டிய நிலையில் இலங்கை இருக்கிறது.

தவிர்க்க முடியாத இந்த புவிசார் அரசியல் போட்டிகளுக்குள் இலங்கைத்தீவு சிக்கிக் கொண்டதால், இவ் வாறான பல சவால்களும், சிக்கல்களும் அவ்வப்போது வந்து கொண்டு தான் இருக்கும்.

இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! இழுபறி யாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். அரசாங்கம் தொடர்பான விவ காரங்களில் சாதகமான போக்கு காணப் படும். மரியாதையும், அந்தஸ்தும் அதிக ரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும்.




ரிஷபராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். அடு த்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். அதே நேரத்தில் பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியா பாரத்தில் முன்னேற்றம் காணப்படும். எதிர் பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு கிடைக்கும். நீண்ட நாட்களாக பணம் கைக்கு வந்து சேரும்.



மிதுனராசி அன்பர்களே! முயற்சி கள் வெற்றி பெறும். வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியை யும் கவனத்துடன் வைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னே ற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது. எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக்கும்.



கடகராசி அன்பர்களே! மற்றவர் கள் செய்கைகளால் மனவருத் தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின் தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர் கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக மேலதிகாரி களின் பாராட்டுகளை பெறுவர். குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும்.



சிம்மராசி அன்பர்களே! சகோத ரர்கள் மூலம் நன்மை உண் டாகும். மனோதைரியம் கூடும். தொழில், வியாபாரத் தில் எதிர் பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத் ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத் தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.



கன்னிராசி அன்பர்களே! காரியங் களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தை க்கு வெளி வட்டாரத்தில் மதி ப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எச்சரிக் கையாக இருப்பது நல்லது. உத்தியோ கத்தில் இருப்பவர் கள் மேலதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது.



துலாம்ராசி அன்பர்களே! எல்லா வற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங்க லில் இருந்த பிரச்னை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதக மான போக்கு காணப்படும். தொழில் வியா பாரத்தில் வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். தடை பட்ட ஆர்டர்கள் வந்து சேரும். நன்மதி ப்பை பெறுவர்.



விருச்சிகராசி அன்பர்களே! நீங் கள் ஆராய்ந்து செய்யும் காரியங் கள் சாதகமான பலன் தரும். அடுத்தவர்களுக்கும் உதவ போய் வீண் பழி ஏற்படலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் கருத் துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும் போது கவனமாக பேசுவது நல்லது.






தனுசுராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஓதுங்கி சென் றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்பட லாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்தி லும், மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக் களை தவிர்ப்பது நல்லது.



மகரராசி அன்பர்களே! தடைப் பட்டு வந்த காரியங்கள் சாதக மாக நடந்து முடியும். எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிக ரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் நன்மதிப்பை பெறுவீர்கள். உத்யோகத்தில் சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரி களிடம் பாராட்டு கிடைக்கப் பெறுவர்.



கும்பராசி அன்பர்களே! எதிர் பார்த்த காரிய வெற்றி உண் டாகும். புத்திசாதூரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர் பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப் பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும்.



மீனராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். இருப் பதால் எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். வீண் கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியா பாரத்தில் பங்காளியை அனுசரித்து செல் வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர் கள் எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். இறை வழிபாடு நன்மை தரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

செம்மணி அறிக்கையும் தமிழ்ச் சமூகமும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) அண்மையில் வெளியிட்டிருக்கும் நூலில் இனஅழிப்பு எனப்படுவது கட்டமைப்புக்களுக்கூடாக முன்னெடுக்கப்படுவது தான் என்பது நிறுவப்படுகிறது. அந்நூலை கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும், பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய அந்நிகழ்வு நிறுத்தப்பட்டிருக்கிறது. இலங்கைத்தீவில் இனஅழிப்பானது ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கூடாகவே முன்னெடுக்கப்படுகிறது என்று அந்நூல் நிறுவுகிறது. இன அழிப்பு நடவடிக்கைகளை அரசுகள் மட்டும் முன்னெடுப்பதில்லை.அரசல்லாத,அதேசமயம் நிறுவனமாக கட்டமைப்புக் களோடு காணப்படுகின்ற போராட்ட அமைப்புக்களும் முன்னெடுத்ததுண்டு.

ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கூடாக முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கை கள் எல்லாமே கட்டமைப்புச் சார்ந்தவை தான். ஓர் அரசு அதன் உபகரணங் களான நாடாளுமன்றம், படைக் கட்டமைப்பு,திணைக் களங்கள்,அதிகார சபைகள் போன்ற பல்வேறு பெரிய மற்றும் சிறிய கட்டமைப்புகளுக்கூடாக தமிழ்மக்கள் ஒரு தேசிய இனமாக இருப்பதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் அல்லது அந்தத் தேசிய இருப்பைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் பல தசாப்த காலமாக ஈடுபட்டு வருகிறது.

ஆனால் அதை எதிர் கொள்வதற்கான தமிழ் மக்களின் நடவடிக்கைகள் கடந்த 17 ஆண்டுகளாக எவ்வாறு உள்ளன? ஒடுக்குமுறைகள் கட்டமைப்பு சார்ந்து இடம்பெறும் போது அதை எதிர்கொள்வதற்கான ஒடுக்கப்படும் தரப்பின் நடவடிக்கைகளும் கட்டமைப்பு சார்ந்தவைகளாக இருக்க வேண்டும். தங்களை ஒரு தேசம் என்று அழைத்துக் கொள்ளும் தமிழ் மக்கள் அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்கி,இன அழிப்பை ஒரு தேசமாக எதிர்கொள்ள வேண்டும்.ஆனால் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் தமிழ் மக்களிடம் உண்டா?

கட்சிகள் உண்டு குடிமக்கள் சமூகங்கள் உண்டு. ஆனால் நீதிக்கான போராட்டத்திற்குத் தேவையான ஏனைய கட்டமைப்புகள் தமிழ் மக்களிடம் உண்டா? குறிப்பாக ஒரு மையத்தில் இருந்து ஒருங்கிணைக்கப்படும் கட்ட மைப்புகள் உண்டா? ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்படாத,தேவையான கட்டமைப்புகள் உருவாக்கப்படாத.ஓர் அரசியற் சூழல் தான் இப்பொழுதும் உண்டு. அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில் தான் தமிழ்த் தேசிய அரசியலானது தொடர்ச்சி இல்லாததாகவும், நிறுவன மயப்படாத தாகவும் காணப்படுகிறது. பேராசிரியர் சோமதேவவை எதிர்கொண்ட விதத்தி லும் அது தெளிவாகத் தெரிகிறது.

புதிய சட்ட முன்மொழிவுகள்:-

(23ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ் மக்களுக்கு எதிரான போர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் வேட்டை பற்களுக்குள் சிக்கித் தப்பி பிழைத்த ஜேவிபிதான் இப்பொழுது ஆழும் அரசாங்கத்தின் அடித்தளமாக இருக்கிறது.கடந்த பல ஆண்டுகளாக பயங்கர வாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று தமிழ் மக்கள்,முஸ்லிம் மக்கள் போராடியபோது ஜேவிபியும் அவர்களோடு காணப்பட்டது.அதே ஜேபிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்பொழுது நாட்டை ஆள்வதற்கு ஒரு புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்கின்றது. கலாச்சாரம்காண்

இன அடிப்படையிலான தேசியவாதம் நம் நாட்டில் இன்னும் மறைந்திருக்கவே செய்கிறது;அது முழுமையாக ஒழியவில்லை என்று விவசாயம்,கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளுக்கான அமைச்சர் கே.டி.லால்கந்த கூறியுள்ளார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், அதை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எவரும் காண முடியும்.''.... இது மீண்டும் தலைதூக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.''....இத்தகைய போக்குகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும், தடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் லால்கந்த தெரிவித்துள் ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு அடித்தளமாகக் காணப்படும் ஜேவிபியின் தீர்மானிக்கும் சக்திகளில் லால்கந்தவும் ஒருவர்.அவர் கூறுவது தான் அரசாங்கம் மேசையில் வைத்திருக்கும் பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைப் பாது காக்கும் சட்டமூலத்தின் மெய்யான நோக்கம் என்று எடுத்துக் கொள்ளலாமா? அப்படி எடுத்துக் கொண்டால், நாட்டில் இனவாதம் இல்லை என்று அரசுத் தலைவர் திரும்பத் திரும்ப சொல்வதை எப்படி விளங்கிக் கொள்வது? இன அடிப்படையிலான தேசியவாதத்தை ஒரு தீமையாக அரசாங்கம் கருதுமாக இருந்தால் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாரில்லை என்று பொருள்.தமிழ்மக்களின் தேசிய இருப்பை ஏற்றுக் கொள்ள மறுப்பது.அதாவது இலங்கைத்தீவின் பல்லினச் சூழலை ஏற்றுக்கொள்ள மறுப் பது. அதுதானே இனவாதம்?

பாகிஸ்தானை நெருங்க விடுமா இந்தியா?

(16ம் பக்கத் தொடர்ச்சி) விவகாரத்தில் நெருக்கமான ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள விரும்புகிறது. அதற்கான மூலோபாய முயற்சிகள் தான் இப்போது முன்னெடுக்கப்படுகின்றன. பாகிஸ்தான் பாதுகாப்பு செய லாளரின் பயணத்தின் போது இது பற்றிய பேச்சுக்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. அவை வெளிப் படையானவையாக இடம்பெறவில்லை. மறைமுகமாக இடம்பெற்றவை. இராஜ தந்திரத்திலும் புலனாய்விலும், பல விட யங்கள் வெளிப்படையாக இடம்பெறு வதில்லை. வெளியே கூறப்படுகின்ற காரணங்களும், பெயர்களும், வேறானவை யாக இருக்கலாம். அவற்றின் அடிப்படை நோக்கங்கள் வேறுபட்டதாக இருக்கும். இந்த வகையில் இலங்கையுடன் பாகிஸ்தான் ஏற்படுத்தி வருகின்ற இந்த நெருங்கிய ஒத்துழைப்பு புவிசார் அரசியல் போட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாத்திரமன்றி, இலங்கைக்கு கடும் சவாலான ஒன்றாகவும் மாறக்கூடும்.

ஏனென்றால், விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்காக இரண்டு நாடுகளும் ஒரே கோட்டில் பயணித்தது போன்ற புறச் சூழல் இன்று இல்லை. எனவே, ஒன்றை யொன்று முட்டிமோதும் வகையிலான இராஜதந்திரமும், மூலோபாய தந்திரங் களுமே இதில் கையாளப்படும்.

மட்டக்களப்பில் பிறந்து யாழ்.இந்துவில் படித்த கிரிக்கட் வீரரின் பெயர் அமெரிக்க கிரிக்கெட் புகழ் மண்டபத்தில் இணைக்கப்பட்டது!

மட்டக்களப்பில் பிறந்து, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஐந்து ஆண்டுகளும் பாடசாலை கிரிக்கெட் விளையாடியவரும், 1970 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்தவருமான நோயியல் மருத்துவ நிபுணர் டாக்டர் குமார் பாலகிருஷ்ணன், ஒக்டோபர் 3ஆம் திகதி கனெக்டிகட் மாநிலத்தின் வின்ட்சர் நகரில் நடைபெற்ற நிகழ்வில் அமெரிக்க கிரிக்கெட் புகழ் மண்டபத்தில் (Cricket Hall of Fame) இணைத்துக் கௌரவிக்கப்பட்டார்.



2026ஆம் ஆண்டுக்கான புகழ் மண்டபத்தில் இணைக்கப்பட்ட 14 பேரில் டாக்டர் பாலகிருஷ்ணனும் ஒருவராவார். நியூயோர்க்கில் உள்ள ஸ்டேட்டன் ஐலண்ட் கிரிக்கெட் கழகம் அவரை இதற்காகப் பரிந்துரைத்தது. அவர் அக்கழகத்தின் உப தலைவராகப் பணியாற்றி வருகிறார். புகழ் மண்டபத்தின் 45ஆவது இணைப்பு விழா வின்ட்சரில் உள்ள மேரியட் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் சுமார் 300 விருந்தினர்கள் கலந்து கொண்டதாக NY Carib News செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வார இறுதியில் இலங்கையில் வெளியான செய்தியொன்று, நியூயோர்க் நகரிலுள்ள ஸ்டேட்டன் ஐலண்ட் கிரிக்கெட் கழகத்தினால் டாக்டர் பால கிருஷ்ணன் புகழ் மண்டபத்தில் இணைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தது. உண்மையில், அவரைப் பரிந்துரைத்தது அந்தக் கழகமே தவிர, கௌரவத்தை வழங்கியது அல்ல. கனெக்டிகட்டைத் தளமாகக் கொண்ட சுயாதீன இலாப நோக்கற்ற அமைப்பான கிரிக்கெட் புகழ் மண்டபமே அவரைக் கௌரவித்தது.

மேலும் 1995ஆம் ஆண்டு அவரது கிரிக்கெட் வாழ்க்கை 14 வயதுக் குட்பட்ட பாடசாலை அணியில் விளையாடியதன் மூலம் ஆரம்பமான தாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆனால், 1963 ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த ஒருவரின் கிரிக்கெட் வாழ்க்கை 1995ஆம் ஆண்டில் ஆரம்பித்திருக்க முடியாது. இந்த 1995ஆம் ஆண்டு என்ற திகதி, கிரிக்கெட் புகழ் மண்டபத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட அவரது வாழ்க்கைக் குறிப்பிலும் இடம்பெற்றுள்ளது.

ஹார்ட்ஃபோர்டைத் தளமாகக் கொண்ட கிரிக்கெட் புகழ் மண்டபம் 1980ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதன் முதலாவது இணைப்பு விழா அடுத்த ஆண்டில் நடை பெற்றது. உலகின் முதலாவது கிரிக்கெட் புகழ் மண்டபம் இதுவென அந்த அமைப்பு தன்னை அறிமுகப்படுத்துகிறது. சேர் டொனால்ட் பிராட்மன், சேர் கார்ஃபீல்ட் சோபர்ஸ், சுனில் கவாஸ்கர் உள்ளிட்ட புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள் அதன் உறுப்பினர்களாக உள்ளனர்.

2010ஆம் ஆண்டு ஸ்டேட்டன் ஐலண்ட் கிரிக்கெட் கழகத்தின் இளையோர் கிரிக்கெட் திட்டத்தை ஆரம்பித்ததில் அவர் ஆற்றிய பங்களிப்பும் டாக்டர் பாலகிருஷ்ணன் கௌரவிக்கப் பட்டதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

அவரது கௌரவிப்பு நிகழ்வுக்காகத் தயாரிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தின் படி, நியூயோர்க்கில் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருப்பதை அவர் நீண்டகாலமாக அவதானித்து வந்தார். அதனை மாற்றுவதற்கான முயற்சியாகவே அவர் இளையோர் கிரிக்கெட் திட்டத்தை ஆரம்பித்தார்.

1872ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஸ்டேட்டன் ஐலண்ட் கிரிக்கெட் கழகம், தொடர்ச்சியாக இயங்கி வரும் அமெரிக்காவின் மிகப் பழமையான கிரிக்கெட் கழகம் எனத் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இலங்கையின் கிழக்குக் கரையோர நகரமான மட்டக்களப்பில் டாக்டர் பாலகிருஷ்ணன் பிறந்தார். ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்ற காலத்திலேயே அவர் கிரிக்கெட் விளையாடத் தொடங்கினார். டென்னிஸ் பந்துகளையும் தற்காலிகமாகத் தயாரிக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களையும் பயன்படுத்தி வீதிகளிலும் திறந்த வெளிகளிலும் அவர் விளையாடியதாகப் பாராட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13 வயதில், மட்டக்களப்பில் உள்ள மெதடிஸ்ட் மத்திய கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட அணியில் அவர் விளையாடினார். பின்னர், அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விடுதி மாணவராகச் சேர்ந்தார். அங்கு கல்லூரியின் முதலாவது பதினொருவர் அணியில் ஐந்து ஆண்டுகள் சகலதுறை ஆட்டக்காரராக விளையாடினார் எனப் பாராட்டுப் பத்திரம் குறிப்பிடுகிறது.

1960ஆம் ஆண்டு கொழும்பில் வெளியான டெய்லி நியூஸ் பத்திரிகை, அவரை வடக்கின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர் (School Boy Cricketer of the North) எனத் தெரிவு செய்ததாக கிரிக்கெட் புகழ் மண்டபத்தின் வாழ்க்கைக் குறிப்பு கூறுகிறது.

20 வயதான நிலையில், 1963ஆம் ஆண்டு சிலோன் பல்கலைக்கழகத்தின் பேராதனை மருத்துவப் பீடத்தில் அவர் இணைந்தார். இப்பல்கலைக் கழகம் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகம் என அழைக்கப் படுகிறது. அங்கு ஐந்து ஆண்டுகள் பல்கலைக்கழக அணிக்காக விளையாடிய அவர், 1967ஆம் ஆண்டு அணித் தலைவராகவும் பணியாற்றினார்.

மருத்துவப் பட்டப்படிப்பை முடித்த பின்னர், பயிற்சி மருத்துவராகப் பணியாற்றிய காலத்திலும் அவர் கிரிக்கெட் விளையாடுவதைத் தொடர்ந்தார். அக்காலத்தில் அவர் மிஸ்டர் கிரிக்கெட்டர் (Mr. Cricketer) என அழைக்கப்பட்டதாகப் பாராட்டுப் பத்திரம் குறிப்பிடுகிறது. 1968ஆம் ஆண்டு அவர் மருத்துவப் பட்டப் படிப்பை நிறைவு செய்தார்.

நியுயோர்க்கிற்குச் சென்ற பின்னர், தற்போது பிரொங்க்ஸ்கேர் சுகாதார அமைப்பு (BronxCare Health System) என அழைக்கப்படும் மருத்துவ நிறுவனத்தில் உள்ளக மருத்துவப் பயிற்சியை அவர் நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, புரூக்ளினில் அமைந்துள்ள கோனி ஐலண்ட் மருத்துவமனையில் உடற்கூறு நோயியல் மற்றும் மருத்துவ நோயியல் துறைகளில் வதிவிடப் பயிற்சியை மேற்கொண்டார். இந்தப் பயிற்சியை 1975ஆம் ஆண்டு நிறைவு செய்தார்.

1978ஆம் ஆண்டு வரை நியூ யோர்க்கில் ஒழுங்கமைக்கப்பட்ட கிரிக்கெட் விளையாடுவதற்கான வாய்ப்புகள் அவருக்குக் கிடைக்கவில்லை. அந்த ஆண்டில்தான் ஸ்டேட்டன் ஐலண்ட் கிரிக்கெட் கழகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார் எனப் பாராட்டுப் பத்திரம் தெரிவிக்கிறது.

அந்தக் கழகத்தில் வழக்கமாக விளையாடத் தொடங்கிய அவர், சிறந்த துடுப்பாட்டத்திற்கும் குறைந்த ஓட்டங்களை விட்டுக் கொடுக்கும் சிக்கனமான பந்துவீச்சிற்கும் பெயர்பெற்றார்.

சுமார் 1990ஆம் ஆண்டில் கழகத்தின் நிர்வாகக் குழுவில் இணைந்த அவர், அதன் பின்னர் தொடர்ச்சியாக அக்குழுவில் பணியாற்றி வருகிறார்.

கிரிக்கெட் புகழ் மண்டபத்தின் வாழ்க்கைக் குறிப்பின்படி, 1997ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை அவர் ஒரு மருத்துவமனையின் நோயியல் துறைக்குத் தலைமை தாங்கினார். 2017ஆம் ஆண்டு அவர் ஓய்வுபெற்றார்.

அத்துடன், அமெரிக்க இராணுவத்தின் மருத்துவப் பிரிவான Army Reserve Medical Corps இல் பத்து ஆண்டுகள் பணியாற்றினார். 1999ஆம் ஆண்டு லெப்டினன்ட் கேணல் (Lieutenant Colonel) பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவரது மனைவி டாக்டர் சுஷீலா அரசரத்தினமும் 1968ஆம் ஆண்டு பேராதனை மருத்துவப் பீடத்தில் மருத்துவப் பட்டம் பெற்றவர். அவர் ஸ்டேட்டன் ஐலண்டில் பல ஆண்டுகளாகக் குழந்தை மருத்துவ நிபுணராகப் பணியாற்றி, பின்னர் ஓய்வு பெற்றார் எனக் கிரிக்கெட் புகழ் மண்டபத்தின் வாழ்க்கைக் குறிப்பு தெரிவிக்கிறது.

FOR RENT
SPACIOUS 3-BEDROOM CONDO
KENNEDY & ELLESMERE • SCARBOROUGH
1950 Kennedy Road, Unit 201
AVAILABLE IMMEDIATELY
FREE INTERNET
3 SPACIOUS BEDROOMS
BRIGHT, SPACIOUS LAYOUT
NEWLY RENOVATED KITCHEN
CLEAN AND WELL-MAINTAINED
NEWLY RENOVATED FULL BATHROOM
1 PARKING SPACE
Convenient access to Hwy. 401, TTC, shopping, banks & restaurants.
CALL / TEXT TO VIEW
416-994-3861

யாழ்ப்பாண நூலகம் மட்டுமல்ல முள்ளிவாய்க்காலிலும் எரிந்தது ஒரு நூலகம்



நூல்களோடு முள்ளிவாய்க்கால் வரை பயணித்த பேபி அண்ணாவின் இறுதிப் பயணம்!

தமிழர்களின் வரலாற்று இழப்புகளைப் பற்றிப் பேசும் போதெல்லாம் நம் நினைவுக்கு முதலில் வருவது 1981ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகம் தான். ஆனால் தமிழர்களின் அறிவுச் செல்வம் அழிக்கப்பட்டது அந்த ஒரு சம்பவத்துடன் முடிந்து விடவில்லை.

நமக்குத் தெரியாமலேயே, நமது கண்களுக்கு முன்னாலேயே, இன்னொரு மிகப்பெரிய வரலாற்று இழப்பு நிகழ்ந்திருக்கிறது. அதைப் பற்றி நாம் போதிய அளவில் பேசவில்லை. ஆவணப்படுத்தவும் இல்லை.

அது 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின்போது அழிந்துபோன தமிழர்களின் வரலாற்று ஆவணக் களஞ்சியம். தமிழர்களின் கல்வி, வரலாறு, இலக்கியம் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தவர் திரு. வே. கே. சுப்பிரமணியம் என அறியப்படும் பேபி அண்ணா.

தமிழர்களின் வரலாற்றில் மறைக்கப்பட்ட உண்மைகளையும், திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றுச் செய்திகளையும் தேடித் தொகுத்தவர். தமிழீழத்தின் வரலாற்றை ஆதாரங்களுடன் பதிவு செய்வதற்காகப் பல ஆண்டுகள் உழைத்தவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் இணைந்திருந்த அவர், இயக்கத்தின் மூத்த உறுப்பினராகவும் தமிழீழக் கல்வித்துறையின் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். அதுமட்டுமல்லாமல், வரலாற்று ஆவணங்களைச் சேகரித்தல், வகைப்படுத்துதல், பாதுகாத்தல் போன்ற பணிகளிலும் முக்கிய பங்காற்றியிருந்தார்.

அவரிடம் இருந்த ஆவணங்கள் சாதாரணமானவை அல்ல. பிரித்தானியக் காலனித்துவ ஆட்சிக்காலமான 1830களிலிருந்து கிடைத்த வரலாற்று ஆவணங்கள், 1980களில் தமிழர்கள் தமது பூர்வீகக் கிராமங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் தொடர்பான ஆதாரங்கள் எனப் பல அரிய தகவல்கள் அவரிடம் இருந்ததாக அறியப்படுகிறது.

போராளிகளின் வாழ்க்கை வரலாறுகள், அவர்களின் கவிதைகள், ஆய்வுகள், தமிழர்களின் வாழ்வியல் பதிவுகள் எனப் பல ஆயிரக்கணக்கான ஆவணங்கள் ஒரே இடத்தில் தொகுக்கப்பட்டிருந்தன. அது வெறுமனே ஒரு நூலகம் அல்ல. தமிழர்கள் தங்களுடைய கடந்த காலத்தைத் தாங்களே தேடிக் கண்டறிவதற்கான ஓர் அறிவுக் களஞ்சியம்.அந்த இடத்தை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

2009ஆம் ஆண்டு போர் நெருங்கியபோது, கிளிநொச்சியில் இருந்த அந்த அலுவலகம் இடம் பெயர வேண்டிய சூழல் ஏற்பட்டது. அங்கிருந்த நூல்களும் ஆவணங்களும் ஒரு பெரிய லாரியில் ஏற்றப்பட்டன.

பின்னர் இடப்பெயர்வின் நெருக்கடிகள் அதிகரித்தன. பெரிய லாரியில் எடுத்துச் செல்லப்பட்ட நூல்களைத் தொடர்ந்து பாதுகாப்பது சாத்தியமற்ற நிலை உருவானது. வழியில் சில நூல்கள் வெவ்வேறு இடங்களில் இறக்கி வைக்கப்பட்டன. மிக முக்கியமான நூல்கள் மட்டும் சிறிய வாகனத்தில் மீண்டும் ஏற்றப்பட்டன. அந்தச் சிறிய வான் படிப்படியாக முள்ளிவாய்க்காலை நோக்கிப் பயணித்தது.

ஆனால் அந்த நெருக்கடியான சூழலிலும் பேபி அண்ணா அந்த நூல்களைக் கைவிடவில்லை. மற்றவர்கள் தங்களுடைய உடைமைகளைத் தேடிக் கொண்டிருந்த போது, அவர் தமிழர்களின் வரலாற்றோடு சென்றார். அவர் சுமந்து சென்றது, ஆயிரக்கணக்கான மனிதர்களின் வாழ்க்கை, போராளிகளின் அனுபவங்கள், எழுதப்பட்ட கவிதைகள், பதிவு செய்யப்பட்ட வரலாறுகள், எதிர்காலத் தலைமுறைகள் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள்.

2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் போது, எதிரியின் விமானக் குண்டுவீச்சில் அந்தச் சிறிய லாரி அழிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனுள் இருந்த நூல்களும் ஆவணங்களும் தீக்கிரையாகின.

ஆனால் பேபி அண்ணாவின் கதை அந்த லாரியுடன் முடிந்துவிடவில்லை. இறுதிப்போருக்குப் பின்னர், பேபி அண்ணா பாலகுமாரன் , புலித்தேவன் உள்ளிட்டவர்களுடன் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதன் பின்னர் அவருக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெளிவாகத் தெரியவில்லை. அவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் தேடப்பட வேண்டிய ஒருவராகி விட்டார்.

இங்கே தான் இந்த வரலாற்றின் வலி இன்னும் அதிகமாகிறது. ஒரு காலத்தில் தமிழர்களின் மறைக்கப்பட்ட வரலாற்றைத் தேடித் தொகுத்த மனிதர், இறுதியில் தானே ஒரு காணாமல் ஆக்கப்பட்ட வரலாற்றின் பகுதியாகி விட்டார். அவர் காப்பாற்ற முயன்ற நூல்களும் இல்லை. அவற்றைக் காப்பாற்றப் போராடிய மனிதரின் இறுதி நிலையும் தெரியவில்லை.

நூல்களும் காணாமல் போயின. அவற்றைக் காப்பாற்றிய மனிதரும் காணாமல் போனார். இந்தச் சம்பவத்தை நாம் ஏன் போதிய அளவில் பேச வில்லை?

தங்களைச் சிறந்த எழுத்தாளர்களாகவும், ஈழத்து இலக்கியத்தின் காவலர்களாகவும் அடையாளப்படுத்திக் கொள்பவர்கள், பேபி அண்ணா சேகரித்த அந்த ஆயிரக்கணக்கான ஆவணங்களைப் பற்றியும், முள்ளிவாய்க்காலில் எரிந்து போன அந்த அறிவுச் செல்வத்தைப் பற்றியும் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்?



மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாளி

காலம்: 22.11.2026 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 9:30 - மதியம் 2:00 வரை

METROPOLITAN CENTRE

3840 FINCH AVE. EAST M1T 3T4



ஒரு துளி கண்ணீர்
ஒரு காந்தள் மலர்
ஒரு சூடர்

தொடர்புகளுக்கு: கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் 647-619-3619

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

ஞானசார தேரர் விடுவிக்கப்படுவார்!

(12ம் பக்கத் தொடர்ச்சி) ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் இதன் போது தெரிவித்தார். தற்போது அநுராதபுரம் புனித பூமி குறித்துப் பல்வேறு உரையாடல்கள் உருவெடுத்துள்ள நிலையில், அங்கு உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நாட்டிற்குத் தெளிவாகக் கூற வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. சிலர் இந்த விவகாரத்தை ஒரு 'இந்திய எதிர்ப்பு' பிரச்சாரமாக உருவகப்படுத்த முயற்சி செய்து வருகின்றனர்' என ரணில் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் 3 புதிய சட்டமூலங்கள்

அரசாங்கத்தினால் புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள மூன்று சர்ச்சைக்குரிய சட்டமூலங்கள் தொடர்பாகக் கூட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் கருத்து தெரிவித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இந்த மூன்று சட்டமூலங்களும் தனித்தனியாக அல்லாமல் ஒன்றாகச் நடைமுறைப்படுத்தப்படும் போது நாட்டில் பேரழிவு கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார்.

'பயங்கரவாதத்திலிருந்து அரசினைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் தடுப்புச் சட்டமூலம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான சட்டமூலம் ஆகிய மூன்றையும் ஒன்றாகப் பார்க்கும்போது தான் இதன் பின்னணியில் உள்ள தீவிரமான ஆபத்து புரியும். இது தொடர்பாக விரிவாக பகுப்பாய்வு செய்து, இதற்கு எதிராக நான் நீதிமன்றத்தை நாடினேன். ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி எனக்காக உச்சநீதிமன்றத்தில் வலுவான வாதங்களை முன்வைத்தார். இருப்பினும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதுடன் மட்டும் நமது பணி முடிந்துவிடாது என்பதை நாங்கள் தெளிவாகத் தீர்மானித்துள்ளோம். இந்தச் சட்டமூலங்களால் ஏற்படப் போகும் விபரீதங்கள் குறித்துப் பொது மக்களுக்குப் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்' என்றார்.

சம்பிக்க ரணவக சுவாரசியமான விளக்கம்

கொழும்பு 7இல் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பைத் தொடர்ந்து, முன்னணி ஊடகப் பிரமுகர்களுடன் சுமுகமான உரையாடலில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் பாடலி சம்பிக்க ரணவக சில முக்கிய மற்றும் சுவாரசியமான அரசியல் தகவல்களை வெளிப்படுத்தினார். முந்தைய காலத்தில் சுனாமி நிவாரண சபை அமைக்கப்பட்ட போது தாம் முன்னெடுத்த போராட்ட முறைமையைப் பற்றி இதன் போது விளக்கிய பாடலி சம்பிக்க ரணவக, தந்திரோபாய ரீதியாக எவ்வாறு நகர்வுகளை மேற்கொண்டோம் என்பதைப் பகிர்ந்துகொண்டார். 'நாங்கள் போராட்டம் (சத்யாகிரஹம்) ஒன்றினை நடத்துவதற்காகக் கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்றோம். எனினும், ஸ்ரீதலதா மாளிகையின் உட்புறத்தில் சத்யாகிரஹப் போராட்டத்தை நடத்துவதற்கு தியவடன நிலமே கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

அதற்கு நாங்கள், மாளிகையின் உட்பகுதியில் போராட்டத்தை நடத்தும் எண்ணம் எமக்கு இல்லை என்றும், மாளிகைக்கு வெளியிலேயே அதனை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என்றும் தெளிவுபடுத்தினோம். அதனைக் கேட்டவுடன், மாளிகைக்கு வெளியிலேயே சத்யாகிரஹத்தை நடத்துவதற்கான அனைத்து வசதிகளையும் அவர்களாகவே ஏற்பாடு செய்து தந்தனர். உண்மையில், நாங்களும் அதைத்தான் சாதித்துக்கொள்ள விரும்பினோம்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தையும் தற்போதைய அரசியல் சூழலையும் ஒப்பிட்டுப் பேசிய பாடலி சம்பிக்க, அரசாங்கத்திற்கு எதிரான அடுத்தகட்ட அரசியல் நகர்வு குறித்துப் பின்வருமாறு கூறினார்.

'ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதி தனது ஆட்சிக் காலத்தின் இறுதிக்கட்டத்தில் அவர் மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் அழுத்தங்கள் காரணமாகக் கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தார்.

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசா நாயக்கவின் நிலைமையும் மெல்ல மெல்ல அந்த திசையை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது.

நாங்கள் இப்போது செய்ய வேண்டிய தெல்லாம், இந்தச் சூழலுக்குச் சிறிய தொரு அழுத்தத்தைக் கொடுத்து விட்டு அமைதியாக ஒதுங்கி நின்று நடப்பதைப் பார்ப்பது மட்டுமே' என்றார்.

பாடசாலை - ரியூட்டறிகளுக்கு அருகில் போதைப்பொருள் விநியோகம் 11,000 மேற்பட்ட சிறுவர்கள் கைது!

கடந்த 2025ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் இதுவரை, 233 சிறுமிகள் உட்பட 11,131 சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்தார். பாடசாலைகள் மற்றும் மேலதிக வகுப்புகள் அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐஸ்க்ரீம், பஞ்சுமிட்டாய் மற்றும் 'சரவிட்டா' போன்ற பொருட்களுக்குள் போதைப்பொருட்களை மறைத்து விற்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குழந்தைகளின் உணவுப் பழக்கவழக்கங்கள், நடத்தைகள், உரையாடல்கள் மற்றும் அவர்களின் நட்பு வட்டாரங்களில் ஏற்படும் மாற்றங்களைப் பெற்றோர்கள் மிகவும் அவதானமாக கண்காணிக்க வேண்டும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த மாற்றங்கள், குழந்தைகள் போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளில் சிக்கியுள்ளதற்கான அறிகுறிகளாக இருக்கலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.



புதிய சட்ட முன்மொழிவுகள்:- நாடு எதனை நோக்கிப் போகிறது?

NPP அரசாங்கமும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள துறவிகளும் (இவர்களைச் சிலர் தீவிர வலதுசாரிகள் என்று அழைத்தாலும், இவர்கள் ஏதோ பொம்மைகளை வைத்து விளையாடவே விரும்பியது போலத் தெரிகிறது) இணைந்து, PSTA மற்றும் வரவிருக்கும் பிற கடுமையான சட்டங்களை எவ்விதத் தடையுமின்றி நிறைவேற்றப்படுவதை உறுதி செய்து வருகின்றனர். இந்த 'பொம்மை விளையாட்டு' நம் அனைவரின் கவனத்தையும் திசைதிருப்பி விட்டது இவ்வாறு சமூக ஊடக வலைத்தளங்களில் எழுதியிருப்பவர் சுவாஸ்திகா அருளிங்கம். சில ஆண்டுகளுக்கு முன் இடம்பெற்ற தன்னெழுச்சிப் போராட்டங்களோடு எழுச்சி பெற்ற பெண் செயற்பாட்டாளர் அவர்.

நாட்டில் இப்பொழுது மூன்று புதிய சட்ட முன்மொழிவுகள் மேசையில் வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பாக விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இம்மாதம் ஆறாம் திகதி பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தின் முன்மொழிவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இம்மாதம் 20ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான சட்ட முன்மொழிவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அண்மையில் தமிழரசுக் கட்சியின் சிவஞானம், சுமந்திரன், சாணக்கியன் மூவரும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்தித்து முன்மொழியப்பட்டிருக்கும் சட்டங்கள் தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்டமூலத்திற்கு எதிராக இதுவரையிலும் 40 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சுப்ரீம் கோர்ட் வட்டாரங்கள் தெரிவித்ததாக மனித உரிமைச் செயற்பாட்டாளர் மரிசா.டி சில்வா கடந்த வாரம் முகநூலில் பதிவிட்டிருந்தார். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முக்கிய சட்டச் செயற்பாட்டாளர்கள் மேற்படி சட்டமூலத்திற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

முன்மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஜனநாயக சீர் திருத்தங்களுக்கும் மக்களின் சுதந்திரத்திற்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு காலாவதியான சட்டக் கட்டமைப்பு என்று கூறுகிறார் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவஸிறி.

1979 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் உள்ளிட்ட இந்நாட்டின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் வரலாற்றைப் பார்க்கும்போது அவை பயங்கரவாதத்தை அடக்கியதை விட மக்களின் அரசியல் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் போராட்டங்களை நடத்தும் ஜனநாயக வழிகளை அடக்குவதற்கே தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. மறுபுறம், 1980களில் வடக்கிலும் தெற்கிலும் ஆயுதமேந்திய எழுச்சிகள் மேலும் தீவிரமடைவதற்கே இத்தகைய கடுமையான சட்டங்கள் காரணமாயினவே தவிர, அவற்றினால் வன்முறைகள் கட்டுப்படுத்தப்படவில்லை. என்றும் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவஸிறி மேலும் கூறுகிறார்.

அது போலவே ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான சட்ட முன் மொழிவு தொடர்பாக கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி சாலிய பீரிஸ், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவொன்றுடன் ஒருவர் தொடர்புடையவரா என்பதைத் தீர்மானிக்கும் போது, அந்த நபரின் தலைமுடி அலங்காரம், பச்சைக் குத்தல்கள் அல்லது ஆடைகளை நீதிமன்றங்கள் கருத்தில் கொள்ள அனுமதிக்கும் ஏற்பாடும் இந்தச் சட்டமூலத்தில் இருப்பதாக'' கூறியுள்ளார்.

இவர் இலங்கை சட்டத்தரணிகள் அமைப்பின் முன்னாள் தலைவராகும். மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜிபிஎஸ்பிளஸ் சலுகைகளைத் தொடர்ந்து பெறுவதற்காக அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்யும் அதேசமயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட விடயங்களை உத்தேச 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான' சட்டமூலத்திற்குள் உள்ளடக்க முயற்சிக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

"PTA சட்டத்திற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் கூறப்படும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் (PSTA) சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ள அனுமதிக்கும் ஏற்பாடுகளை நீக்கும் என்று கூறும் அவர், "PTA சட்டத்தின் கீழ் இத்தகைய ஒப்புதல் வாக்கு மூலங்கள் பயன்படுத்தப் பட்டமை, பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் துறையினரிடையே சித்திரவதைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவதற்கான ஒரு சூழலை உருவாக்கியுள்ளதாகவும் அவர் குற்றம் காட்டுகிறார்.

எனினும் அரசாங்கத்தினால் தனியாக முன் மொழியப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான சட்ட மூலம், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்(ASP) பதவியிலிருந்து அதற்கு மேற்பட்ட பதவிகளிலுள்ள பொலிஸ் அதிகாரிகளிடம் வழங்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சியங்களாகப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம், அதேபோன்ற ஏற்பாடுகளை மீண்டும் கொண்டு வர முயற்சிப்பதாகவும் சாலிய பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான சட்ட மசோதாவானது, போதுமான நீதித் துறை மேற்பார்வை அல்லது குற்றச் செயல்களுக்கான சான்றுகள் இன்றி நீண்டகால தடுப்புக் காவலைச் சாத்தியம் ஆக்குவதோடு, காவல்துறையினரால் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் தண்டனைகளை அனுமதிப்பதன் மூலம் சித்திரவதையை ஊக்குவிக்கக்கூடும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசிய இயக்குநர் எலைன் பியர்சன் எச்சரித்துள்ளார்.

இந்தச் சட்டம் அதன் தற்போதைய வடிவத்தில் நிறைவேற்றப்பட்டால், இதற்கு முன்னர் இதேபோன்ற கடுமையான சட்டங்கள் செய்ததைப் போலவே, இதுவும் கடுமையான உரிமை மீறல்களைக் கட்டவிழ்த்து விடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. என்றும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்கொள்ள வேண்டிய கடமை ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் உண்டு. ஆனால் அவ்வாறு செய்யும்போது சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு உட்பட்டே செயல்பட வேண்டும், என்றும் இந்த மசோதா.ஜிஎஸ்பி (GSP+) வர்த்தகத் திட்டத்தின் கீழ் இலங்கை கொண்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றப் போதுமானதாக இருக்காது என்பதை ஐரோப்பிய ஒன்றியம் தெளிவாக உணர்த்த வேண்டும். என்றும் எலைன் பியர்சன் கூறியுள்ளார்.

முன் மொழியப்பட்டிருக்கும் இரண்டு புதிய சட்டமூலங்களுக்கும் எதிராக அனைத்துலக மன்னிப்புச் சபை,மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற பெரும்பாலான உலகப்பொது மனித உரிமை அமைப்புகள் கருத்து தெரிவித்துள்ளன. எனினும் மேற்சொன்ன உலகப் பொது அமைப்புகள், துறைசார் நிபுணர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரின் குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள், எதிர்ப்புகள் எல்லாவற்றையும் மீறி அரசாங்கம் இப்பொழுது மேசையில் வைத்துள்ள சட்டங்களைச் சில திருத்தங்களோடு அல்லது திருத்தங்கள் இல்லாமலேயே நிறைவேற்றும் ஆபத்து அதிகம் உண்டு.

மேற்சொன்ன இரண்டு சட்ட முன் மொழிவுகள் மட்டுமல்ல, சிவில் சமூக செயற்பாடுகளை நிர்வகிப்பதற்காக முன்மொழிக்கப்பட்ட அரசுசாரா அமைப்புகள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டமூலம் 2026 தொடர்பாகவும் சிவில் சமூகங்கள் பின்வரும் குற்றச் சாட்டுகளை முன்வைக்கின்றன

புதியதாக முன்மொழியப்பட்டுள்ள சட்டம் சிறிய சமூகக் குழுக்களைக் கூட அரசாங்கத்தின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரக் கூடும். மரண உதவிச் சங்கங்கள் முதல் சீட்டுச் சங்கங்கள் மற்றும் லயன்ஸ் கழகங்கள் வரை, தங்கள் சமூகங்களுக்கு உதவுவதற்காக ஒன்றிணைந்து செயற்படும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் பதிவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்படலாம். இது நிதிக் குற்றங்களைத் தடுப்பதைப் பற்றியது மட்டுமல்ல. மாறாக, சிவில் சமூகச் செயற்பாடுகள் மீதான கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவதைப் பற்றியது

எனினும் மேற்சொன்ன உலகப் பொது அமைப்புகள்,துறைசார் நிபுணர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரின் குற்றச் சாட்டுகள், விமர்சனங்கள், எதிர்ப்புகள் எல்லாவற்றையும் மீறி அரசாங்கம் இப்பொழுது மேசையில் வைக்கப் பட்டுள்ள சட்டங்களைச் சில திருத்தங்களோடு அல்லது திருத்தங்கள் இல்லாமலேயே நிறைவேற்றும் ஆபத்து அதிகம் உண்டு. யார் போராடினாலும் போராட விட்டாலும் மேற்படி சட்ட மூலங்களை நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பெரும் பான்மை அரசாங்கத்திடம் உண்டு. இந்த மூன்றில் இரண்டு பெரும் பான்மையை வைத்து அரசாங்கம் விரும்பிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும். எனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது என்பதற்காக அந்தச் சட்டம் மக்களுக்கு குறிப்பாக சிறிய தேசிய இனங்களுக்கு பொருத்தமானதாக இருக்கவேண்டும் என்று இல்லை.

எல்லா நாடுகளிலும் சட்டம் எனப்படுவது அங்குள்ள பெரும்பான்மை பலத்த கொண்ட அரசாங்கத்தால் நிறைவேற்றப்படுகிறது. அது சொர்க்கத்தில் நிறைவேற்றப்படுவது அல்ல. சட்டங்களை அரசியல்வாதிகள்தான் நிறைவேற்றுகிறார்கள்.நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக யார் இருக்கிறார்களோ அவர்கள் வைத்ததுதான் சட்டம்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கூரான கத்தி ஆகிய பயங்கரவாத தடை சட்டமும் அப்படித் தான். அவசரகாலச் சட்டமும் அப்படித்தான். இப்பொழுது அரசாங்கம் மேசையில் வைத்திருக்கும் சட்டமூலங்களும் அப்படிப்பட்டவை தான். தமிழ் மக்கள் மக்களுடைய எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களுக்குச் சட்டங்கள் தேவை.அது பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகவும் இருக்கலாம். அவசர காலச் சட்டம் ஆகவும் இருக்கலாம். ஏன் பெருந்தொற்று நோய்க் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் சட்டமாகவும் இருக்கலாம்.

அதனால் தான் சட்ட ரீதியானவை எல்லாம் நீதியானவைகளாக இருக்க வேண்டும் என்று இல்லை என்று ஓர் ஆங்கில வாசகம் உண்டு. அடிமை முறை சட்டப்படி தான் முன்னெடுக்கப் பட்டது. ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான இன அழிப்பு சட்டப்படி தான் முன்னெடுக்கப்பட்டது .தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் சட்டப் படி தான் முன்னெடுக்கப்பட்டது இலங்கையிலும் (18ம் பக்கம் பார்க்க)





அனுராதபுரத்தில் இந்துக் கோவில்களை அமைக்கும் திட்டமில்லை என்கிறார் புத்தசாசன அமைச்சர்!



அனுராதபுரம் புனித நகர திட்டத்தில் இந்து கோயில்களை அமைக்கும் முன் மொழிவு உள்வாங்கப்பட்டுள்ள தாக முன்வைக்கப்படும் முற்றிலும் போலியானது. குறுகிய அரசியல் இலாபத்துக்காக இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. அனுராதபுரத்தின் புனித தன்மையை பாதுகாப்பதற்காகவே அபிவிருத்தி திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது என புத்தசாசனம் மற்றும் மத விவ காரங்கள் அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

அனுராதபுரம் புனித நகர அபிவிரு த்தி திட்டத்தில் சிவன் மற்றும் இராமர் கோயிலை அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச உதய கம்மன்பில ஆகியோர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

உதய கம்மன்பில புனித அனுராதபுரம் நகர திட்டம் தொடர்பில் போலியான விடயங்களை குறிப்பிட்டு மத முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிப்ப தாக குற்றச்சாட்டி சிவில் செயற்பாட் டாளரான உபாலி ரத்நாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் அனுராத புரம் புனித நகர அபிவிருத்தி குறித்து தனியார் ஊடகத்துடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் சுனில் செனவி மேலும் குறிப்பிட்டதாவது.

அனுராதபுரம் புனித நகர அபிவிரு த்தி திட்டத்தால் அனுராதபுர நகரின் புனித தன்மைக்கும், தொல்லியல் மரபுரிமைகளுக்கும் எவ்வித பாதிப் பும் ஏற்படாது. புனித அனுராதபுரம் அபிவிருத்தி திட்டம் எமது அரசாங் கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் உருவாக்கப்பட்டதல்ல. 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இந்த திட்டம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சி யாகவே தற்போது புதிய திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் புனித அபிவிருத்தி திட்டத்தில் இந்து கோயில்களை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளதாக ஒரு சில அரசியல்வாதிகள் முன் வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இவர்கள் ஏன் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன் வைக்கிறார்கள் என்பது தெரிய வில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக எதிர்க்கட்சியினர் முன் வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் வெறும் குற்றச்சாட்டுக்களாகவே அமைந்துள்ளது. இதுவும் அவ்வா றானதே. பௌத்த மதத்துக்கு எதிராக ஒரு போதும் செயற்படவில்லை. பௌத்த மதத்தின் உரிமைகளை பாதுகாத்துக் கொண்டு ஏனைய மதங்களில் உரிமைகளும் பாதுகாக் கப்படுகின்றன. எந்த மதத்துக்கும் எதிராக செயற்படவில்லை. மத நல்லி ணக்கத்தின் ஊடாகவே தேசிய நல்லி ணக்கத்தை வெற்றிக் கொள்ள முடி யும் என்றார்.

சிங்களவர்களின் இதயத்தை நொருக்கும் பாவச் செயலுக்கு இந்தியா உடன்படக் கூடாது!



ருவன்வெ பௌத்தர்களின் புனித தலமாகவும், சிங்களவர்களின் இதய மாகவும் காணப்படுகிறது. அனுராத புரம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ருவன்வெலிசாயவை அண்மித்த பகுதியை அகழ்ந்தால் தூபி உடை ந்து விழும் நிலைமை ஏற்படும். ஆகவே இந்த பாவச்செயலுக்கு இந்தியா பங்காளியாக கூடாது என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சரு மான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சி காரியாலத்தில் திங்கட் கிழமை நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போது மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து சிங்களவர்களுக்கு எதிராகவும், பௌத்தத்துக்கு எதிராக வும் செயற்படுகிறது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிப்ப தில்லை. மகாநாயக்க தேரர்களை சந்திக்கும் போது அவர்கள் அணி விக்கும் பிரித் நூலை மறுகணமே அவிழ்த்து வீசி விடுகிறார். பௌத்த மதத்துக்கு எதிரான இந்த அரசாங் கத்துக்கு சிங்கள பௌத்தர்களின் இதயமான புனித அனுராதபுரம் நகரை அபிவிருத்தி செய்ய எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

அரசாங்கத்தினால் வர்த்தமானி அறி வித்தலில் வெளியிடப்பட்டுள்ள புனித அனுராதபுரம் நகரம் அபிவிருத்தி யால் ஏற்படும் பாரிய விளைவுகளை முன்கூட்டியதாகவே அறிவித்துள் ளோம். இந்த திட்டத்துக்கு இந்தியா நிதியுதவி வழங்குவதாக குறிப்பிடப் படுகிறது.

ருவன்வெலிசாய விகாரை பௌத்தர் களின் புனித தலமாகவும், சிங்களவர் களின் இதயமாகவும் காணப்படு கிறது. இந்த திட்டத்தின் கீழ் ருவன் வெலிசாயவை அண்மித்த பகுதியை அகழ்ந்தால் தூபி உடைந்து விழும் நிலைமை ஏற்படும். ஆகவே இந்த பாவச்செயலுக்கு இந்தியா பங்காளி யாக கூடாது.

ஜனாதிபதிக்கு தற்போது பதவிக்கான சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டு ள்ளன. ஆகவே பதவிக்காலம் முடிந் ததன் பின்னர் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்க நேரி டும். ஆகவே பிறர் மீது போலி யான குற்றச்சாட்டுக்களை முன் வைப் பதை ஜனாதிபதிதவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை தடுத்தல் சட்ட மூலத்துக்கு சாதாரண மக்கள் எதிர் ப்பு தெரிவிக்கவில்லை. பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப் பொரு ளுக்கு கடுமையான நடவடிக்கை களை எடுக்க வேண்டுமாயின் இந்த சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். இன்னும் ஒருமாத காலத்துக்குள் இந்த சட்டம் நிறைவேற்றப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரி வித்தார்